# விவேகவாணி

ஜூலை 2012 - ஸ்ரீ நந்தன - ஆனி - ஆடி கலி 5114 ₹.7/-

## காஞ்சி முனிவர் - பாரத மக்களின் குரு



# விவேகவாணி

**விவேகானந்த கேந்திர மாத இதழ்**

**விவேகானந்தபுரம், கன்னியாகுமரி - 629 702**


## வணக்கம்! வாருங்கள்!!


**வெளியீட்டு அலுவலகம்**

**விவேகானந்த கேந்திரம், 5 - சிங்கராச்சாரி தெரு,**

**திருவல்லிக்கேணி, சென்னை - 600 005**


அன்புள்ள வாசக நேயர்களுக்கு,
நமஸ்காரம்.

**விவேகவாணியின் ஜுலை - 2012** இதழின் அட்டைப் படம் **குரு சிஷ்ய** பரம்பரைத் தொடரில் பாரத மக்களின் குருவாகத் திகழ்ந்த **காஞ்சி மாமுனிவரின்** திருவுருவப் படத்தைத் தாங்கி வருகிறது. தேசீயம் பற்றி அவர் தந்த விரிவான விளக்கமும் வெளியாகிறது. **ஜுலை -4** அன்று **சுவாமி விவேகானந்தரின் மஹாசமாதி** தினத்தை ஒட்டி கன்னியாகுமரியில் தொண்டர் கூட்டமும், அன்னபூஜையும் நடைபெறும். குரு பூர்ணிமை தமக்கு உலக அறிவும், ஆன்மீக அறிவும் தரும், குருமார்களை வணங்கும் திருநாள் ஆகும்.

ஆடி மாதம் பிறந்து விட்டாலே பலப்பல பண்டிகைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வரும். தட்சிணாயன புண்ணிய காலம், வரலக்ஷ்மி விரதம், ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், காயத்ரீ ஜபம், கண்ணன் பிறந்த நாள், ஆடிக் கிருத்திகை, சுதந்திர தினம் முதலிய பல புனித நாட்களை அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டாடுவோம்.

இடவசதிக்கேற்ப பிற கட்டுரைகள் வெளியாகின்றன.

வாசகர்கள் வாழ்வில் நலன்கள் பெருக இறையருளை வேண்டுகிறோம்.

**இப்படிக்கு,**
**இறைவன் பணியில்,**
**விவேகவாணி**

**ஜுலை - 2012**


**தொலைபேசி: (044) - 28440042/28442843**
**ஈமெயில்: vkpt@vkendra.org**

**தவம் 28** | **ஜுலை - 2012** | **சேவை - 3**

**தனிப்பிரதி ரூ. 7/-, ஆண்டுச்சந்தா ரூ. 75/-, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/-, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/-, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/-, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

# மாதம் ஒரு மந்திரம்

## குரு துதி

**அகண்ட மண்டலாகாரம் வ்யாப்தம் யேன சராசரம்**
**தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம:**

**(விஸ்வ ஸார தந்த்ரா)**

நான் தெய்வீக குருவை வணங்குகிறேன். அசைவன, அசையாதிருப்பன யாவற்றையும் சுற்றி வளைத்து, ஊடுருவி நிற்கும் பரம்பொருளை அவரே நமக்குக் காட்டி அருளுகிறார்.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே (திருமந்திரம்)**

**ஜுலை 2012 விவேகவாணியின்** அட்டையில் குரு, சீட வரிசையில் பாரத மக்களின் குருவாக விளங்கிய காஞ்சி முனிவரின் திருவுருவப் படத்தை வெளியிடுகிறோம். நம் பண்பாட்டின் மிக உச்ச நிலையாகிய தியாகத்தின் திருவுருவமாகவும், ஞானியாகவும் விளங்கிய அவரை ஆதிசங்கரரின் மறுஅவதாரம் என்றே மக்கள் போற்றினர். மக்களையும், அரசையும் நல்வழிப்படுத்தும் வண்ணம் அவர் அளித்த நற்செய்தியின் சுருக்கத்தைக் கீழே வெளியிடுகிறோம். இதன் விரிவான வடிவம் விவேகானந்த கேந்திரத்தின் யுவபாரதி ஆங்கில பத்திரிக்கையின் 72-ம் ஆண்டு, மலரில் வெளியாயிற்று.

## அறிவுரைச் சுருக்கம்

**1) தர்ம சக்கரம்; பகவானின் அருட்சூசகம்:** பாக்கியவசமாக நமது சுதந்திர பாரதத்தின் கொடிக்கு நடுவில் நடுநாயகமாக பகவானது தர்மஸ்வரூபமான சக்கரம் இடம் பெற்றிருக்கிறது. இக்கொடியின் அமைப்பைத் திட்டமிட்ட தலைவர்களின் கருத்து வேறுவிதமாக இருப்பதாகத் தோன்றினாலும், நாமோ, ‘பகவானே இந்நாட்டின் உயிர்நிலை, அவரைச் சுற்றியே பிரஜைகளின் வாழ்க்கை முழுதும் படர்ந்திருப்பதுதான்’ என்பதை நமக்கு நினைவூட்டவும், அவரது காப்பு சுதந்திர பாரதத்திற்கு எப்போதும் உண்டு என்று காட்டுமுகமாகவுந்தான் அவரது இத்தர்ம சக்கரம் நமது கொடி நடுவில் இடம் பெறக் கருணை கூர்ந்திருக்கிறாரென எண்ணுகிறோம்.

**2) உண்மையான 'ஸெக்யூலரிஸம்':** 'ஸெக்யூலரிஸம்' என்பது உண்மையில் யாது என்று தெரிவிக்க வேண்டியுள்ளது. தற்போது எண்ணுவதுபோல் அது அரசாங்கம் எந்த மதத்தையும் சாராது, அதாவது மதத்தொடர்பே அற்று இருப்பதல்ல. மாறாக அது, அரசாங்கமானது எந்த ஒரு மதத்தையும் மட்டும் சாராது, எல்லா மதங்களையும் ஆதரிப்பதாக இருப்பதே என்பதுதான் சரியான பொருள்.

**3) மக்களின் உள்ள உயர்வில் அரசின் பொறுப்பு:** உடலைவிட முக்கியம் உள்ளமேயன்றோ? பிரஜைகளின் அந்த உள்ளமாம் உயிரை அபிவிருத்தி செய்வதை ஓர் அரசாங்கம் புறக்கணிக்க முடியுமா? உள்ளவுயர்வு பெறாத மக்கட்கூட்டம் வாழும் நாடு நாடாகுமா? உயர்ந்தோர் மாட்டே உலகு என்பதன்றோ ஆன்றோர்-சான்றோர் அறிவுரை? எனவே, ஒரு நாட்டின் பரிபாலனத்திற்குப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கம், நாடு நாடாக இருக்கவேண்டுமாயின், மக்களின் உள்ளத்தை உயர்த்தவும் நிச்சயமாக உதவி புரியத்தான் வேண்டும்.

இந்த உள்ள உயர்வை அளிப்பது மதமாகவே இருப்பதால், அதன் அபிவிருத்தியில் அரசாங்கத்திற்குப் பங்கு இருக்கிறது என்பதும் நிச்சயம்.

**4) மத விஷயத்தில் அரசின் பங்குக்குள்ள வரம்பு:** நாட்டைச் சேர்ந்த பிரஜைகளின் உள்ளவுயர்வுக்கு உபாயமான மதாபிமானத்தை வளர்த்துக் கொடுப்பதில் அரசாங்கத்திற்கு ஒரு பங்கு மட்டுந்தான் உண்டு என்பதேயாகும். அதாவது மதத்துறையில் அரசாங்கமே முற்றிலும் பொறுப்பேற்பது ஒருபோதும் ஏற்கத்தக்கதல்ல. மத வளர்ச்சியில் தன் பங்கை ஓர் அரசாங்கம் மறக்கலாகாது என்பது எவ்வளவு முக்கியமோ, அதனினும் முக்கியம் அப்பங்கின் வரம்பைக் கடந்து அது செயலாற்றலாகாது என்பதாகும்.

5) மதக் கொள்கைகளுக்கு முரணான சட்டங்கள் கூடாது.

6) மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடலாகாது.

7) மதமாற்றத்தில் தவறான உபாயங்களுக்குத் தடை, தண்டனை தரப்படவேண்டும்.

8) இந்தியாவின் உயிர்நிலையே மதமும் ஆன்மீகமும்தான்.

9) இந்தியாவில் மத உணர்வின் நலிவு: ஆயிரம் ஆண்டு வரலாறு காட்டுவது.

10) கல்வித் திட்டத்தில் மாற்றம்; மத போதனைக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும்.

11) அரசியல் சுதந்திரம் போல் ஆன்மிய சுதந்திரத்திற்காகவும் மக்களே போராடவேண்டும்.

12) சிறுபான்மைச் சமூகத்தினரும் தேசப்பற்றுக் கொள்ளச் செய்வது பெரும்பான்மையினரின் அன்புக்கடமையாகும்.

**13) தேசிய இலக்ஷிய வாசகமாக வேதவாக்கு:** மகிழ்ச்சிக்குரிய மற்றொன்று, தேசத்தின் இலக்ஷிய வாசகமாகவே உபநிஷத வாக்கான 'ஸத்யமேவ ஜயதே' என்பதைத் தேர்ந்தெடுத்திருப்பதாகும்.

வேதத்தின் உட்பொருள்

# பிரணவம் எனும் ஓம்காரம் (256)

## மாண்டுக்ய உபநிஷதம்


### *கௌடபாதரின் காரிகை*

**காரிகை:**

**அநாதி மாயயா ஸுப்தோ யதாஜீவ: ப்ரபுத்யதே/**
**அஜமனித்ரமஸ்வப்னமத்வைதம் புத்யதேததா (16)**

துவக்கமே அற்ற மாயையினால் பாதிப்புண்டு. உறங்கும் தனிநபர், உறக்கம் கலந்து விழிக்கும்போது, அவர் பிறவியற்ற, உறக்கமற்ற, கனவற்ற, இரண்டற்ற துரீயத்தை உள்ளபடி உணர்கின்றார்.

**ஜீவன் =** மறுபிறப்பு எடுக்கும் தனிஆத்மா / ஸுப்த உறங்கும் போது, விழிப்பு, உறக்கம் இரண்டு அவத்தைகளிலும், கனவு காண்பவர். இவர் என் தந்தை, இது என் மகன், இது என் பேரன், இது என் வயல், இவை என் பசுக்கள், நான் அவைகளின் எஜமானன், நான் இன்புறுகிறேன், துன்புறுகிறேன். இதனால் நான் வறுமையுற்றேன் (இழந்தேன்) இதனால் நான் லாபம் அடைந்தேன் என்றெல்லாம் பார்க்கின்றார். அவர் உறக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார். உறக்கம் என்பது மாயையே. அதன் செயல்பாடு துவக்கமே இல்லாதது. அதற்கு இரண்டு முகங்கள் உண்டு. உண்மையைக் காணாமல் இருக்கும் காரண நிலை (அவத்தை) உண்மையைத் தவறாகக் காணுதல்.



**யதா =** எப்போது கருணை மிகுந்த ஆசிரியரால் விழிப்படையச் செய்யப்படும் போது, அந்த ஆசிரியர் உபநிஷதங்களில் லட்சியமாகிய சத்தியத்தை உணர்ந்தவர், நீ ஒரு காரண காரிய முடிச்சுக்களில்லை, நீயே அதுவாக இருக்கின்றாய் என்று மாணவரை எழுப்புபவர் – அப்போது தனிநபர் இதனை உணர்கின்றார். எவ்வாறு?



**அஜம் =** பிறப்பற்றவர். அதில் புற, அக மாறுபாடுகள் எதுவும் இல்லை. உடன்பாட்டுப் பொ ரு ள் க ள் எதற்குரியவையோ அந்தப் பிறப்பு. புறப்பொருள் அகத்திலும், புறத்திலும் மாறுதலுக்குட்பட்டவை. ஆ த் மா அவ்வாறல்ல என்று பொருள். அவர் 'அநித்ரம்' உறக்கமற்ற துரீயம் துரீயத்தில் உறக்கமோ காரண அவத்தையோ இல்லை, உறக்கம் (காரண அவத்தையில்) இருக்கும் அறியாமை இருட்டு பிறப்புக்குக் காரணமாகிறது. துரீயம் என்பது, உறக்கமற்றது என்பதால், அவர் அது அஸ்வப்னம் – கனவற்றது, தவறான பார்வை இல்லாதது, காணாமல் இருப்பது நித்ரா. அது, உறக்கமற்றது, கனவற்றது. ஆகவே அந்தத் தனிநபர் அப்போது, புத்யதே = பிறப்பற்ற, இரண்டற்ற துரீயத்தைத் தன் ஆத்மாவாக உணர்கின்றார்.

**காரிகை**

**பிரபஞ்சோ யதிவித்யேத நிவர்த்தேத ந ஸம்சய**
**மாயாமாத்ரமிதம் த்வைத மத்வைதம் பரமார்த்தத: (17)**

இந்தப் பிரபஞ்சம் (வெளிப்பார்வைக்குத் தெரியும் உலகம்) ஏதாவது இருப்பு உடையதென்றால், அது இல்லாமல் போய்விடும். இதில் ஐயம் இல்லை. இந்த துவைதம் (இருமை) எல்லாம் மாயையைத்தவிர வேறு இல்லை. உண்மையில் அது அத்வைதமே (இரண்டற்றதே).

வெளித்தெரியும் பிரபஞ்சப் படைப்பை மறுப்பதால் ஒருவரை விழிப்புறச் செய்யவேண்டும் என்றால் அவ்வுலகம் நீடித்து இருக்கின்றவரை அத்வைதம் (இரண்டற்ற நிலை) எப்படி இருக்க முடியும்? இதற்குப் பதில் இவ்வுலகத்திற்கு நிலைத்த இருப்பு என்ற ஒன்று இருந்தால் அத்வைதம் இருக்காதுதான். ஆனால் கயிற்றின் மீது பாம்பு போல ஏற்றிச் சொல்லப்படுவதால் (இவ்வுலகம்) இல்லாததுதான். இதில் ஐயம் இல்லை. அது இருந்திருந்தால், அது இருப்பது நின்று போய்விடும் (இல்லாமல் போய்விடும்) கயிற்றில் இருப்பதாகக் கற்பனையாக, பார்வைக் கோளாறால் கருதப்படும் பாம்பு, உண்மையில் இருக்கிறது, அது பார்வை சரியாவதால் விலக்கப்படுகின்றது என்பதில்லை. மாயாஜாலக்காரனின் மாயாஜாலம் உண்மையில் இருப்பது, பார்ப்பவனின் பார்வை மயக்கம் விலக்கப்படுவதால் மாயாஜாலம் விலக்கப்படுகின்றது என்பது இல்லை. இந்த துவைதம் (இருமை) மாயையைத் தவிர வேறில்லை. அதற்கு ''வெளித்தெரியும் பிரபஞ்சம்'' என்று பெயர். பரம சத்தியமானது இரண்டற்றது

(அத்வைதமானது) கயிற்றையும் மாயாஜாலக்காரனையும் போல. காணப்படுவது, மறைந்துபோவது என்ற உலகம் என்பதே கிடையாது.

**காரிகை**

**விகல்போ விநிவர்த்தேத கல்பிதோ யதி கேனசித்**
**உபதேசாதயம் வாதோ ஜ்ஞாதே த்வைதம் நவித்யதே (18)**

பல்விதத்தன்மை யாராலாவது கற்பனை செய்யப்பட்டிருந்தால் அது மறைந்துவிடும். இவ்வாறு பேசுவது, பாடம் சொல்லிக் கொடுப்பதற்காகவே. உண்மையை உணர்ந்தபின் இருமை (துவைதம்) இல்லாமல் போய்விடுகின்றது.

கற்பித்தல், கற்பிப்பவர், கற்பிக்கப் படுபவர் ஆகிய கற்பனைகள் எப்படி மறையும்? இதற்குப்பதில். பல்விதத்தன்மை தொடர்ந்து இருக்காது. அது யாராலாவது கற்பனை செய்யப்பட்டிருந்தால். (அது இல்லாமல் போய்விடும்) பாடம் கற்பிப்பதற்கு உதவும் பொருட்டு, இப்பார்வைக்குத் தெரியும் பிரபஞ்சம் மாயாஜாலம், கயிற்றுப்பாம்பு போன்றதே. அதுபோல கற்பிக்கப்படுபவர் முதலிய வேறுபாடுகள் கற்பனையே. ஆகவே கற்பித்தல், கற்பிப்பவர், கற்பிக்கப்படுபவர் என்பதெல்லாம், பாடம் சொல்லிக் கொடுப்பதற்காகவே. கற்பித்தலின் முழுப்பயன் கிடைத்ததும், பரம்பாருள் அறியப்பட்டதும் இருமை (துவைதம்) ஒழிந்து போகிறது.

**உபநிஷதம்**

**ஸோS யமாத்மாSத்யக்ஷர மோங்காரோSதிமாத்ரம் பாதா மாத்ரா மாத்ரா ஸ்ச பாதா அகார உகாரோ மகார இதி (உபநிஷதம் 8)**

அதே ஆத்மா (அதைக் குறிக்கும்) அசைகளாகப் பார்த்தால் ''ஓம்'' ஆகும். (அதில் இணைந்துள்ள) எழுத்துக்களாகப் பார்த்தால் (ஆத்மாவின்) பாதங்கள் (ஓம்இன்) எழுத்துக்கள் ஆகும். எழுத்துக்களே பாதங்கள். (அந்த எழுத்துக்கள்) அ, உ, ம என்பவை.



அந்த ஆத்மாவே ஓம்-க்குச் சமமாகக் கூறப்பட்டது (மா - 2 இல்) இந்த ஆத்மா நான்கு பாதங்களைக் கொண்டது எனப்பட்டது. (ஓம் என்பதால்) குறிக்கப்படும் பொருளுக்கு முக்கியத்துவம் முதலிடம் கொடுக்கப்

பட்டது. அந்த ஆத்மாவை அசைகளின் நோக்கில் கூறினால் (ஓம்) என்பதை அசைகட்கு முக்கியத்துவம் கொடுத்துக் கூறினால் (ஓம் என்பது) ஆகும். அதன் எழுத்துக்கட்கு முக்கியத்துவம் கொடுத்தால், அதன் ஆதாரமாக எழுத்துக்களைக் கொண்டால் ஆத்மாவின் பாதங்களே ஓம்–இன் எழுத்துக்கள் ஆகும். அவையாவை? அவை அ, உ, ம் என்பவையாகும்.

## உபநிஷதம்

**ஜகரிதஸ்தானோ வைச்வானரோSகார ப்ரதமா மாத்ராSS**
**ப்தேராதி மத்த் வத்Sவாப்நோதி ஹ வை ஸர்வான்**
**காமானாதிஸ்ச பவதி ய ஏவம் வேத (9)**

வைச்வானரின் பணிக்களம் விழிப்புநிலை ஆகும். அதுமுதல் எழுத்தாகிய 'அ' என்பதாகும். எங்கும் பரவி இருப்பதும் முதலில் வருவதும் (இரண்டுக்கும்) ஒப்புமை ஆகும். இவ்வாறு அறிபவர் விரும்பத்தகுந்த பொருள்கள் அனைத்தையும் அடைகின்றார். அ வ ர் மகத்தானவர்களுள் முதன்மையானவர் ஆகின்றார். (உபநிஷதம் 9)

இவற்றினைப்பற்றி, திட்டவட்டமான உ ற வு க ள் நிறுவப்படுகின்றன. வைச்வானரனாக (விராட்) இருப்பவர் எவரோ அவருடைய பணிக்களம் விழிப்பு நிலை ஆகும். [தூலமான தனிநபர் என்ற நிலையில் (விச்வர்) ஆத்மாவும், தூல பிரபஞ்ச அளவிலான ஆ த் மா வு ம் வைச்வானரன் அல்லது விராட்) ஒன்றே. அ து போ ல வே தைஜஸமும் ஹிரண்யகர்ப்பமும் ஒன்றே. ப் ரா ஜ் ஞா வு ம் அவ்யக்தமும் ஒன்றே. அது எந்த ப ணி க் க ள த் தி ல் வெளித்தோன்றுகின்றது என்பதில் தான் வேறுபாடு. இந்த மூலபாடத்திலும் தொடர்ந்து வரும் மூலபாடங்களிலும் இச்சொற்கள் வேறுபாடு கருதாமல் பயன்படுத்தப்படுவது, இந்த சமத்துவத்தை ஐக்கியத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.]



வைச்வானரனே முதல் எழுத்தாகிய 'அ' என்று ஓம்–இல் முதல் எழுத்தாகக் குறிப்பிடப்படுகின்றது. எந்த ஒ ற் று மை யி னா ல்? அது கூறப்படுகின்றது. அது எங்கும் பரவி இருப்பதனால், பேச்சு முழுவதும் 'அ' என்ற ஓசை பரவி இருக்கின்றது. வேத மூலபாடம் 'அ' என்ற ஓசைதான் பேச்சு முழுவதும் என்று கூறுகின்றது. (ஐதரேய ஆரண்யகம் II / iii / 7.13)

இதுபோலவே இந்த ஜகத் (படைப்பு) முழுவதும் வைச்வானரனால் ஊடுருவப்பட்டுள்ளது. இவ்வாறு வேதமூலநூல் கூறுகின்றது. இந்த ஆத்மாவின் தலை உண்மையிலேயே விண்ணுலகம் ஆகும். அதாவது வைச்வானரன் ஆகும். (சாந்தோ V / 18/2). சொல்லும் அதனால் குறிக்கப்படும் பொருளும் ஒன்றே என்று கூறினோம். முன்னால் வருவது ஆதிமத் (முதலாவது) எனப்படும். 'அ' எனும் எழுத்து முதலில் வருவது போலவே, வைச்வானரனும் முதலில் வருவது. இந்த ஒற்றுமையால் வைச்வானரன் அ-உடன் ஐக்கியப்படுத்திக் கூறப்படுகின்றது. இந்த ஒற்றுமை ஐக்கியத்தை அறிந்தவர் அடையும் பலன் யாது? அது கூறப்பட்டுள்ளது. விரும்பத்தக்கப் பொருள்கள் யாவற்றையும் அவன் அடைகின்றான். மகத்தானவர்களுள் அவன் முதன்மை பெறுகின்றான். இவ்வாறு அறிபவன்.)



**உபநிஷதம்**

**ஸ்வப்னஸ்தானஸ் தைஜஸ உகாரோ த்விதீயா மாத்ரோத் கர்ஷாதுபய த்வாத்வோத்கர்ஷதி ஹவை ஜ்ஞானஸந்ததிம் ஸமானச்ச பவதி நாஸ்யா ப்ரம்ம வித் குலேபவதி ய ஏவம் வேத (10)**

கனவைத் தன் செயல்களமாக (பணிக்களமாக) உடையவன் தைஜஸன். அவன் ஓமின் இரண்டாவது எழுத்தான 'உ' ஆவான். உயர்வாலும் இரட்டை சம்பந்தம் உடைமையாலும். எவன் இங்ஙனம் அறிகின்றானோ, அவன் ஞானப்பெருக்கை உண்மையில் உயர்த்துவான். அன்றியும் சுகதுக்கம் முதலிய இரட்டைகளில் சமபுத்தி உடையவன் ஆவான். அவன் குலத்தில் பிரம்மஞானம் இல்லாதவன் தோன்றமாட்டான்.

தைஜஸனின் பணிக்களம் கனவு எனும் அவத்தை ஆகும். அதுவே ஓம்-இன் இரண்டாவது எழுத்தான 'உ' ஆகும். எந்த ஒற்றுமையால். உயர்வாக இருப்பதனால். 'உ' எனும் எழுத்து 'அ' எனும் எழுத்தைவிட உயர்ந்ததாகும். அதுபோலவே தைஜஸன் விச்வனைவிட உயர்ந்தவன். இது ஏனெனில் 'உ'

என்பது இடைநிலையாக இருப்பதால் (இரட்டை சம்பந்தம் கொண்டிருப்பதால்) 'உ' எனும் எழுத்து, அ-வுக்கும் ம-வுக்கும் இடைப்பட்டது. அதுபோலவே தைஜஸன் விச்வனுக்கும், ப்ராஜ்ஞனுக்கும் இடைப்பட்டவன். தைஜஸன் தான் 'உ' இரண்டுடனும் தொடர்பு கொண்டிருப்பது, அவற்றின் ஒப்புமையாகும். இதனை அறிபவன் பெறுவதென்ன? அது கூறப்படும். அவன் தன் ஞானப்பெருக்கை அதிகரிப்பான். உயர்த்துவான். அவன் தன் நண்பர்களின் பொறாமைக்கு உள்ளாவதில்லை. அதுபோலவே அவனுடைய விரோதிகளும் அவனிடத்தில் பொறாமை கொள்வதில்லை. இவ்வாறு அறிவும் அவன் குலத்தில் பிரம்மத்தை அறியாதவர் யாரும் பிறப்பதில்லை.

## உபநிஷதம்


**ஸுஷுப்தஸ்தான: ப்ராஜ்ஞோ மகாரஸ்த்ருதீயா மாத்ரா மிதேரபீதேர்வா மினோதி ஹ வா இதம் ஸர்வமபீதிச்ச பவதி ய ஏவம் வேத (11)**

அளவைக் காட்டும் தன்மையாலும், தன்னிடம் மறைத்துக் கொள்ளும் தன்மையாலும் மூன்றாவது மாத்திரையாகிய மகாரமே ஸுஷுப்தியை ஸ்தானமாக உடைய ப்ராஜ்ஞன். எவன் இங்ஙனம் அறிகின்றானோ அவன் (அறிவால் உலகனைத்தையும்) அளவிடக்கூடியவனாகவும், எல்லாவற்றையும் (தன்னிடம்) மறைத்துக் கொள்ளக்கூடியவனாகவும் ஆகின்றான்.

அவனே ப்ராஜ்ஞன். அவனுடைய பணிக்களம் உறக்க உலகம் 'ம' எனும் எழுத்து. அது மூன்றாவது எழுத்து (ஓம்-இன் மூன்றாவது எழுத்து) எந்த உவமையால்? அது கூறப்படுகின்றது. அளவை காட்டும் தன்மையினால் யவை எனும் தானியமானது, ப்ரஸ்த்தா எனும் அளவால் அளக்கப்படுவது போல விச்வனும், தைஜஸனும் அளக்கப்படுகின்றனர். அவர்கள் பிரளயத்தின்போதும், உற்பத்தியின்போதும் ப்ராஜ்ஞனின் உட்புகுந்து வெளிவருகின்றனர். அதுபோலவே, 'ஓ' என்பதன் உச்சரிப்பின் முடிவிலும், அதன் மறு உச்சரிப்பிலும் 'அ' 'உ' எனும் எழுத்துக்கள் 'ம' எனும் கடைசி எழுத்துக்குள் புகுந்து வெளிவருவதுபோல் தோன்றுகின்றன. அதனுடன் ஒருங்கிணைவதால், உறிஞ்சப்படுவதால் 'ஓம்' என்பதை உச்சரிக்கும்போது, 'அ, உ,' என்பவை கடைசி எழுத்தான 'ம' என்பதில் ஒன்றிணைந்து விடுவதுபோல் ஆகிவிடுகின்றன. அதுபோலவே, விச்வனும் தைஜஸனும் உறக்கத்தில் ப்ராஜ்ஞனுடன் ஒன்றிணைந்து விடுகின்றனர். இந்த உவமையினாலும் கூட பிராஜ்ஞனுக்கும் 'ம'-வுக்கும் ஒப்புமை இருக்கின்றன. இதை அறியும் மனிதன் எய்துவதென்ன? அவன் இப்பிரபஞ்சத்தையே அளக்கிறான். அதன் சத்தியத்தை உணர்கின்றான். இப்பிரபஞ்சம் ஒடுங்கும் இடம் ஆகின்றான். ஆத்மா அதன் காரண அவத்தையில் ஒடுங்குகின்றது. இரண்டாம் தர முக்கியத்துவம் கொண்ட விளைவுகளை இங்கே புகழ்வது முதல்தர வழிகளைப் புகழ்வதற்காகவே.

# புனித மந்திரம் ஆகிய ஓம் பற்றி சுவாமி ராமதீர்த்தர் கூறியது

**ஓம்காரத்தை உச்சரித்து ஓதுவது எப்படி?** ஓம் (அ, உ, ம) என்ற மந்திரத்தில் முதல் எழுத்தாகிய -அ- என்பது இந்த கண்டிப்பான சத்தியத்தைக் குறித்து நிற்கிறது. அது உங்கள் ஆத்மா ஆகும். அது விழிப்புநிலை பருப்பொருள் உலகின் மாயத் தோற்றத்தைக் காட்டுகின்றது. அதற்கு அடித்தளமாக விளங்குகின்றது. -உ- என்பது மன உலகத்தின் பிரதிநிதி. கடைசி எழுத்தாம் -ம்- என்பது முழுமையான, பரபூரண ஆத்மாவைக் குறிக்கிறது. அது ஒழுங்கற்ற குழப்பமான நிலையின் அடியில் இருக்கிறது. அறியப்படாத ஒன்றாக அது உருவெடுத்துத் தோன்றுகின்றது.



ஓம்காரத்தை உச்சரிக்கையில், ஞானிகள் தங்கள் கவன முழுவதையும் ஒருங்கிணைக்க வேண்டும். ஆத்மா எனும் தீவிர சத்தியம் மூவுலகங்களாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளுகிறது. மூவுலகங்களையும் அழிக்கவும் அழிக்கிறது. ஓம்-ஐ உச்சரிப்பவர் இந்த ஆன்ம உணர்வினை வெளிப்படுத்த வேண்டும். சூரியன் உதயகாலத்தில் நிறங்களைக் காட்டுகிறது. அஸ்தமன காலத்தில் கிரணங்களைத் தனக்குள் இழுத்துக் கொள்கிறது. இதேபோல் ஆத்மாவும் செய்கிறது என்று ஓம்கார உச்சரிப்பில் உணர வேண்டும்.

இவ்வுலகங்கள் தற்காலிகமானவை, தோன்றி மறைபவை. உங்கள் கனவில் நீங்கள் ஒரு ஓநாயைப் பார்க்கிறீர்கள். ஓநாய் உங்களை விழுங்கிவிடும் என்று அஞ்சுகிறீர்கள். நீங்கள் பயப்பட்டாலும் நீங்கள் பார்ப்பது ஓநாயைக் கண்டு அல்ல. உங்களையே தான் பார்க்கிறீர்கள். ஆகவே வேதாந்தம் கூறுகிறது. விழிப்பு நிலையிலும் நீங்களே பகைவன், நீங்களே நண்பன், நீங்கள்தான் சூரியன். சூரியனைப் பிரதிபலிக்கும் தண்ணீர்க் குளமும் நீங்களேதான். விளக்கும் நீங்கள் தான், விட்டிலும் நீங்கள்தான். நீங்கள் எதிர்கொள்ளும் மிகக்கொடுமையான பகைவனும் நீங்களேதான். வேறு யாரும் இல்லை. ஓம்காரத்தை உச்சரிக்கும்போது, உங்கள் மனத்தை உண்மை உணர்வின் உயர்ந்த நிலைக்கு உயர்த்தி இவ்வுண்மையை உணரவேண்டும். பொறாமையையும், தீய எண்ணத்தையும் மனத்தில் இருந்து வேருடன் பிடுங்கி எறியவேண்டும். அவற்றை ஏற்க மறுக்க வேண்டும். தனிமை என்ற எண்ணத்தைக் களை எடுப்பதுபோல் எடுத்து எறிந்து விடுங்கள். நண்பர், பகை என்ற உருவும், வடிவும் வெறும் கனவுகளே! நட்பும் பகையும் நீங்களேதான். நீங்கள் நேற்று செய்த பொருள்கள் இன்று உங்களுடன் இருக்கின்றனவா? அவை வெறும் கனவுகள் தாமே! அவை

(தொலைந்து) போய்விட்டன. நேற்றைய பொருள்கள் போய்விடவில்லையா! இந்த அர்த்தத்திலும் விழிப்பு நிலை அனுபவம் ஒரு கனவே! கனவு நிலை அனுபவமும் கனவே! உண்மையானது, ரொக்கப்பணம், தீவிர சத்தியம், உண்மை ஆத்மா அவற்றுக்குப் பின்னால் நிற்கிறது. அதனை உணர்ந்து கொள்ளுங்கள்.

**மேலே எழுங்கள்!** சிலர் எண்ணங்கட்குத் திட வடிவம் தர விரும்புகின்றனர். எல்லா திடப்பொருள்களும் வெறும் எண்ணங்களே என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். அவர்கள் பருப்பொருள் உலகினை உண்மை என்று நம்புகின்றனர். சூக்கும உலகம், எண்ண உலகம் இவற்றைக் காட்டிலும் பருப்பொருள் உலகம் உண்மையானது என்று அவர்கள் நம்புகின்றனர். வேதாந்தத்தின்படி, பருப்பொருள் உலகமும், சூக்கும உலகமும் உண்மையற்றவை. நீங்கள் அவற்றை மீறி மேலெழ வேண்டும். ஏனெனில், ஓய்வுணர்வு, உண்மையான சாந்தி, ஆனந்தம் ஆகியவற்றை வேண்டுமானால், அனைத்திற்கும் அடித்தளமான, பின்னிற்பதான உண்மைச் செல்வமான வாஸ்தவ நிலையை உண்மையை உணர்ந்தாக வேண்டும்.

அ – உ – ம் என்பதில் சில சந்தர்ப்பங்களில் 'அ' என்பது ஒரு மாத்திரை அல்லது வடிவமாகக் கருதப்படுகிறது. உ என்பது, மாத்திரையாகவோ, வடிவமாகவோ கருதப்படுகிறது. –ம்– என்பது மாத்திரையாகவோ, வடிவமாகவோ கருதப்படுகிறது. ஆனால், ஓம் என்பது, மாத்திரை அல்லது வடிவத்தோடு நின்று விடுவதில்லை. அது பரிரண உண்மை நிலையைக் குறிக்கின்றது. உண்மைச் செல்வம் அதுவே. அந்த மாத்திரைகளின் ஊடே ஓடி, அவற்றின் அடித்தளமாகத் திகழுவது ஓம் தான். எங்களுக்கு உயிர்ச்சக்தி வேண்டும். வெறும் கருத்துக்கள் போதாது என்கின்றனர். மக்கள் ஆஹா! உயிர்ச்சக்தி என்பதென்ன? அது கனவுநிலையின் உயிர்ச்சக்தியா, கனவற்ற ஆழ்ந்த உறக்கத்தின் உயிர் நிலையா, விழிப்பு நிலையா? உங்களுக்கு எதுவேண்டும்? இவை எல்லாம் வெறும் புறத்தோற்றங்களே! முழு உண்மை, உண்மையான உயிர்ச்சக்தி உங்கள் ஆத்மா (தான்) தான். நீங்கள் புலன்களின் வழியே தொடர்ந்து சுகம் அனுபவிக்க முடியாதவாறு அதற்கு உங்களை அனுமதிக்காத கடுமையான சட்டதிட்டங்கள் இருக்கின்றன. உங்களை நீங்களே, புலன் இன்பங்கட்கு விற்றுப் போட்டு விடமுடியுமா! புலன் இன்பம் என்ற தளத்திலே நின்று இன்பம் காண முடியுமா? இல்லை! அது நடக்காது! இந்த விதிகள் அசைக்க முடியாதவை தடுக்க முடியாதவை. அவை வெறும் புலன் இன்பங்களை அனுபவித்து மகிழ்ச்சியுடன் இருக்க உங்களை விடவே விடமாட்டா!

**அழுத்தம் திருத்தமான அடிப்படை உண்மை:** ஆத்மா தான் உண்மையான உயிர்ச்சக்தி! அப்பட்டமான உண்மை அதுவே. இதனை உணர்ந்து கொள்ளுங்கள். இந்த உலகாயத இன்பங்கள் உங்களைத் தேடிவரும். விட்டில் பூச்சி விளக்கைத் தேடிவருவது போல! ஆறுகள், கடலை நோக்கி ஓடுவது போல! சில்லரை அதிகாரிகள் பேரரசனுக்கு சலாம் போடுவதுபோல! நீங்கள்

உங்கள் உண்மை ஆன்மாவை, பரிபூரணமாக அறிந்து, உணரும்போது, இந்த இன்பங்கள் உங்களைத் தேடிவரும். உங்கள் தெய்வீகப் பேரரசு பெருமைமிகு ஆத்மன், உண்மையான உங்கள் இயல்பு, அதையே ஓம் என்பது குறிக்கிறது.

இந்த அ, உ, ம என்ற மூன்று மாத்திரைகள் மூலம் அவற்றுக்கு அடித்தளமாக இருக்கும் சத்தியத்தை உணர ஒரு வழியை ஹிந்து வேதம் காட்டுகிறது. நீங்களே அந்த சத்தியம். ஓம் என்பது புறக்காட்சிகட்கு அடித்தளமாக விளங்கும் சத்தியம், உண்மை, வாஸ்தவ நிலை. நிரந்தர சத்தியம். அழிக்க முடியாத ''தான்''. அதுவே உங்கள் உண்மை வடிவம். இக்காரணத்தால் நீங்கள் இப்புனித மந்திரமாகிய 'ஓம்' என்பதை ஓதி இசைக்கும்போது, உங்கள் அறிவை, உங்கள் உடலை உங்கள் உண்மை வடிவுக்குள் தூக்கிப் போடவேண்டும். உங்கள் உடலும் அறிவும் உண்மையான ''நான்'' என்பதனுள் இணைந்து கரைந்து விடவேண்டும். அதனை உணருங்கள். உணர்வு மொழியில் அதனைப் பாடுங்கள்! உங்கள் செயல்களே அதன் இசையாக வெளிப்படட்டும். உங்கள் உடலின் ஒவ்வொரு மயிர்க்கால் மூலமும் அவ்விசை வெளிவரட்டும். உங்கள் நாடி நரம்புகளின் ஊடே அது பாய்ந்து ஓடட்டும். இதயத்துடிப்பாக அது அதிர்வொலி எழுப்பட்டும். உங்கள் உடலின் ஒவ்வொரு மயிரிழையும், ஒவ்வொரு சொட்டு ரத்தமும் இந்த சத்திய ஒலியை எழுப்பட்டும். நீங்கள்தான் ஒளிக்கெல்லாம் ஒளி! சூரியனின் சூரியன். உலகினை ஆள்பவர். அரசருக்கு அரசர். உண்மையான ''நீங்கள்.'' சூரியனும் விண்மீன்களும் நீங்கள் பிடித்துப் போட்டவை. விண்ணுலகும், மண்ணுலகும் நீங்கள் படைத்தவை. ஒவ்வொன்றும் உங்கள் பெருமையைப் பறைசாற்றுகின்றன. இப்படைப்பு முழுவதும் உங்களுக்குத் தலைவணங்கி நிற்கிறது. (நிறைவு)

## *நந்தன வருடம் ஆடி மாத ஹிந்துப் பண்டிகைகள்*

*2012 ஜூலை 16 முதல் ஆகஸ்ட் 15 வரை*

**ஜூலை – 3** குரு பூர்ணிமா, **4 – சுவாமி விவேகானந்தர் மஹா சமாதி நாள் – அன்னபூஜை, 16 –** தட்சிணாயனப் புண்ணிய காலம், **17 –** வரலட்சுமி விரதம், **18 –** ஆடி அமாவாசை, **23 –** ஆடிப்பூரம், லோகமான்ய பாலகங்காதர திலகர் பிறந்த நாள், நாகபஞ்சமி, **25 –** கோஸ்வாமி துளசிதாசர் பிறந்த நாள், **29 –** புத்ரதா பவித்ர ஏகாதசி.

**ஆகஸ்ட் – 1** லோகமான்யர் புண்ய திதி, யஜுர் உபாகர்மம் நாரியல் பூர்ணிமா, **2 –** காயத்ரீ ஜபம், ஆடிப் பதினெட்டு, ரட்சாபந்தன், **5 –** மஹா சங்கட ஹரசதுர்த்தி, **6 –** ஹிரோஷிமா தினம், **7 –** நட்பு நாள், **8 –** உலக முதியோர் தினம், **9 –** கோகுலாஷ்டமி, உலக உள்ளூர் மக்கள் தினம், **10 –** ஆடிக் கிருத்திகை, **11 –** குதிராம் போஸ் நினைவு நாள், **13 –** அஜ ஏகாதசி/ சம்ஸ்க்ருத தினம், **14 –** நாராயண குரு பிறந்த நாள், **15 –** சுதந்திர தினம், ஸ்ரீ அரவிந்தர் பிறந்த நாள்.

# நசிகேதமன்றம்

சி. முத்துசாமி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை

***1815) நாட்டை ஆளும் மன்னர்களை மகாராஜா என்றும் சக்கரவர்த்தி என்றும் அடைமொழி கொடுத்தும் அழைக்கின்றோம். அதேபோல் முற்றும் துறந்த முனிவர்களையும் கூட மகாராஜ் என்று அடைமொழி கொடுத்து அழைக்கின்றோமே. எதனால் அப்படி அழைக்கிறோம்?***

ஒரு மன்னர் தன் நாட்டின் குடிமக்களை அடக்கி ஆளுவது போல், ஒரு துறவி தன் ஐம்புலன்கள், மனம் இவற்றை அடக்கி ஆள்வார். இக்காரணத்தால் அவர் மகாராஜ் என்று அழைக்கப்படுகிறார். துறவி வேந்தன் என்றும் துறவிகளை அழைப்பது உண்டு. இவ்வுலகில் சிறியதொரு செல்வத்தை தன்னிடம் எடுத்து வைத்துப் பிடித்துக் கொள்பவன் உலகிலுள்ள பிற அனைத்தையும் இழந்து விடுகிறான். துறவியோ எதையும் தனக்கென்று வைத்துக்கொள்ளாததால் இவ்வுலகம் அனைத்தும் அவருக்குச் சொந்தம் ஆகிவிடுகின்றன. இக்காரணங்களால் துறவியை மகாராஜா என்று அழைக்கிறோம்.

**இதை விளக்க ஒரு புனிதக் கதை: ஸ்ரீ ரமணர் கூறியது:** ஸ்வரூபானந்தர் என்ற குருவைப் புகழ்ந்து அவருடைய சீடரான தத்துவராயர் பரணி என்ற ஒரு வகை இலக்கியப் பாடலை எழுதினார். இப்பாடலைக் கேட்டு அதை மதிப்பிட பண்டிதர்களின் அவையினை தத்துவராயர் கூட்டினார். அப்புலவர்கள் மறுப்பு தெரிவித்தனர். பரணி என்ற இலக்கிய பாடல் யாரைப் பற்றி எழுதப்படும் தெரியுமா? போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்ற மகத்தான வீரர்களைப் புகழ்ந்து தான் பரணி என்ற இலக்கிய பாடல் எழுதப்படும். நீங்கள் ஏதோ ஒரு பண்டாரச் சாமியாரைப் புகழ்ந்து எப்படி பரணி பாடலாம்? தத்துவராயர் கூறினார். நாம் எல்லோரும் குருநாதரிடம் போவோம். அங்கு பேசி இந்த விஷயத்தைத் தீர்த்துக் கொள்ளலாம். அவர்கள் எல்லோரும் குருவிடம் போனார்கள். குருவின் முன்னால் உட்கார்ந்திருந்தார்கள். தாங்கள் வந்த காரணத்தைக் கூறினார்கள். குரு மௌனமாக அமர்ந்தார். அவையோர்



அனைவரும் மௌனமாக இருந்தார்கள். பகல் பொழுது கழிந்தது. இரவு வந்தது. இன்னும் சில பகற்பொழுதுகளும், இரவுகளும் கழிந்தன. ஆனாலும் எல்லோரும் மௌனமாக உட்கார்ந்தார்கள். யார் மனத்திலும் எந்த எண்ணமும் எழவே இல்லை. நாம் எதற்காக இங்கே வந்தோம் என்று யாரும் கேட்கவே இல்லை. மூன்று நான்கு நாட்கள் கழிந்தன. குரு தன் மனத்தை சிறிது அசைத்தார். அப்போது தான் அவையோருக்கு மனத்தில் எண்ணங்களே எழ ஆரம்பித்தன. அவர்கள் ஒன்று கூடி அறிவித்தார்கள். குருநாதர் அலையும் மத யானைகளைப் போன்ற எங்கள் அகங்காரங்களை ஒன்று திரட்டி வெல்லும் சக்தி கொண்டவர். இதோடு ஒப்பிடும்போது ஆயிரம் யானைகளை வென்று கொன்று போடுவது ஒன்றுமே இல்லை. ஆகவே இந்தத் துறவி வேந்தனைப் புகழ்ந்து பரணி பாட எல்லாத் தகுதியும் அவருக்கு உண்டு.

இக்கதையில் இருந்து மனத்தை வென்ற துறவியின் பெருமை, பகைவரை வென்ற மன்னரை விடப் பெரிது என்று உணரலாம்.

மு. வெங்கடேஷ், திருநெல்வேலி

### *1816) விஷ்ணுவின் பத்து அவதாரங்களில் ராம அவதாரத்திற்கு பின்னரே கிருஷ்ண அவதாரம் வந்தது. எனவே சீதாதேவி எப்படி தீபாவளியை கொண்டாடினார் என்பதற்குத் தெளிவான விளக்கம் தரவும்?*

ராமர், கிருஷ்ணர் கதைகள் ஒவ்வொரு சதுர் யுகத்திலும் திரும்பத்திரும்ப வருபவை. ஆகவே சென்ற யுகத்தின் கிருஷ்ண அவதாரம் இந்த வட்டத்தின் ராம அவதாரத்திற்கு முந்தி வரும். அத்யாத்ம ராமாயணத்தில் சீதா தேவி பல காரணங்களைக் கூறி தன்னையும் காட்டுக்கு அழைத்துச் செல்லும்படி ராமனிடம் வேண்டுகிறாள். ராமன் மறுக்கவே சீதை கூறுவதாவது: உலகில் பல ராமாயணங்கள் இருக்கின்றன. எந்த ராமாயணத்திலும் சீதையை ராமர் காட்டுக்கு அழைத்துச் செல்லாமல் விட்டுவிடுவது இல்லை என்று கூறுகிறாள். இதில் இருந்தும் ராமாயணம் பல தடவை நடந்த கதை என்று தெரிகிறது.



ராமர் இராவணனைக் கொன்ற தோஷம் தொலைவதற்காக ராமேஸ்வரத்தில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். இதேபோன்ற கதைகள் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள பட்டீஸ்வரத்திலும், வேதாரண்யத்திலும் வழங்குகின்றன. அச்சம்பவங்கள் வெவ்வேறு யுகங்களில் நடந்தவை என்பது பெரியோர் கருத்து.

இராவண வதத்திற்குப் பிறகு எல்லோரும் அயோத்தி திரும்பும்போது அனுமனுக்கு அறிவுறுத்த விரும்பிய ராமர் தன் மோதிரத்தை நழுவ விட்டார். அது கடலில் விழுந்தது. அனுமனை அழைத்து ஆஞ்சநேயா என் மோதிரம் கடலில் விழுந்தது. எடுத்து வா என்றார். கடலின் அடிமட்டத்திற்குச் சென்ற அனுமன் அங்கே 300 மோதிரங்களைப் பார்த்தார். இப்போது ராமர் நழுவவிட்ட மோதிரம் எது என்று தெரியாததால் எல்லா மோதிரங்களையும் எடுத்து வந்தார். இதைப்பார்த்த ராமர் 300 மோதிரங்கள் சேர்ந்து விட்டனவா? ஒவ்வொரு தடவை இராவண வதத்திற்குப் பிறகும் அனுமனுக்கு அறிவுறுத்த ஒரு மோதிரத்தை நான் கடலில் போடுவேன் என்றார். ராமாயணக் கதை பல தடவை நடந்தது என்பது கருத்து. திரும்பத்திரும்ப யுகம் வரும் என்பது நம் நம்பிக்கை ஆகும். ஆகவே முந்தைய யுக வட்டத்தில் நடந்த கிருஷ்ண அவதாரக் கதையை அடுத்த ராம அவதாரத்தில் நினைவுகொள்வது இயல்பே. இதேபோல் **கிருஷ்ண கர்ணாம்ருதம்** என்ற நூலில் கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் யசோதை, ராமர் கதையை பாட்டாகப் பாடுகிறாள். இராவணன் சீதையை தூக்கிச் செல்லும் சம்பவம் வந்தபோது குழந்தை கண்ணன் குதித்து எழுந்து இராவணனை பிடிக்கச் செல்வதாக லீலா சுகர் எழுதி உள்ளார். ராமனையும், கண்ணனையும் ஒருசேர அனுபவிக்க நமக்கு நல்ல வாய்ப்பு. அப்பர் சுவாமிகளும், அருணகிரிநாதரும் ராமர் சக்ராயுதத்தால் இராவணனைக் கொன்றதாக பாடல் எழுதி உள்ளார்கள். வால்மீகி அவ்வாறு கூறவில்லை. அப்பருக்கும், அருணகிரிநாதருக்கும் ராமர் அப்படி காட்சி தந்திருக்கலாம். இறைவனின் மாயையை யார் அறிவார்?



எல். முத்துலெக்ஷ்மி, லட்சுமிபுரம், கோவில்பட்டி

### *1817) மீமாம்ச மத கொள்கை என்ன?*

மீமாம்சை என்பது வேதத்தில் கரும காண்டத்தை வற்புறுத்தும் தத்துவப் பிரிவு ஆகும். பிரித்து அறிவதற்காக கரும காண்டப் பகுதியை பூர்வ மீமாம்சை என்றும், ஞான காண்ட உபநிஷத பகுதியை உத்தர மீமாம்சை என்றும் கூறுவதுண்டு. மீமாம்சையின் நோக்கம் வேதத்தின் உண்மையை நிலை நிறுத்துவது ஆகும். இதில் கண்ணுக்குத் தெரிவது, ஊகித்தறிவது, வேதச் சொல் அர்த்தாபத்தி, அனுபலப்தி என்று ஐந்து வகையாகச் சான்றுகள் ஏற்கப்படும். சான்று இல்லாத அறிவு பயனற்றது என்று மீமாம்சை கூறும். ஆரம்பகால அறிஞர்கள் சொர்க்க இன்பத்தை அனுபவிப்பது மோட்சம் என்று கருதினார்கள். மீமாம்சை என்பது ஒரு பொருள் முதல் தத்துவம் ஆகும். உலகம் உண்மை என்றும் அணுக்களால் ஆனது என்றும் இதில் கூறப்படுகிறது. யாக கருமங்களை

மீமாம்னு வற்புறுத்துகிறது. ஆத்மா என்றும் உள்ளது. உலகப் பொருளில் இருந்து ஆத்மா பற்று அறுப்பதே மோக்ஷம் என்று மீமாம்சை சொல்லுகிறது. ஆதிசங்கரர், குமாரில பட்டரை வாதத்தில் வென்று கருமத்தினால் மோக்ஷம் கிடைக்காது என்றும் கருமம் சித்த சுத்தியை தந்து, சுத்தமான சித்தம் ஞானத்தை அடையும் என்றும் விளக்கம் தந்தார். மீமாம்சைக்கு ஜெய்மினி என்பார் எழுதிய சூத்திரம் உண்டு. மீமாம்சையின் பெருவிளக்கம் தந்தவர்களாக குமாரில பட்டர், பிரபாகரர், முராரி மிஷ்ரா ஆகியோரைக் கூறுவர்.

பிரபா லிங்கேஷ், மேலகிருஷ்ணன்புதூர், கன்னியாகுமரி மாவட்டம்

***1818) சோழநாட்டிலே பிறந்த கண்ணகி பாண்டிய நாட்டில் கணவரை இழந்து சேரநாட்டிலே பத்தினித் தெய்வமாக பக்தர்கள் வழிபடுகின்றனர். அந்த பத்தினி வழிபாடு தான் பகவதி வழிபாடாக மாறியது என்ற கருத்து சேரநாட்டில் உலவுகின்றதே?***

கொச்சியில் இருந்து குருவாயூர் செல்லும் வழியில் இருக்கும் கொடுங்கல்லூரில் ஒரு பத்திரகாளி அம்மன் கோவில் உண்டு. அதையும் கண்ணகி கோவிலாக ஏற்று கண்ணகி படம் ஒன்றை அதன் வாசலில் வைத்திருக்கிறார்கள். கிழக்கு இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் நிறைய கண்ணகி அம்மன் கோவில்கள் உண்டு. கண்ணகி புராணம், கண்ணகி வரலாறு ஆகியவற்றை கதைப் பாடலாக பாடி, திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. மட்டக்களப்பு நகருக்கு அருகில் கண்ணகிக்கு பொன்னால் செய்த விக்ரகம் அமைந்த கோவில் ஒன்று உண்டு. அந்தப் பொன் விக்ரகம் திருடிச் செல்லப்பட்டு ஒரு மதக் கலவரத்துக்கு காரணம் ஆயிற்று. சிங்களவர்களும் கூட இலங்கையின் கிழக்குப் பகுதிக்கு கண்ணகியையே தெய்வமாக



வழிபடுகிறார்கள். சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத் தமிழர்கள் பேசும் தமிழ் மிகத்தொன்மையானது என்று கூறுகின்றார். யாழ்ப்பாணத் தமிழுக்கும், மலையாளத்துக்கும் பேச்சு ஒலியில் நிறைய ஒற்றுமைகள் இருப்பதை காணலாம். இவையெல்லாம் பத்தினித் தெய்வமாம் கண்ணகியோடு தொடர்புடைய சம்பவங்கள். சிலப்பதிகாரத்தை எழுதித் தந்த இளங்கோவடிகள் சேர மன்னனின் தம்பி என்பதும் நினைவுக்குரியது.

டி. சுந்தரமூர்த்தி, முருகன், சேலையூர், சென்னை

*1819) நவபாரதம் என்று வருணிப்பதை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்? 'நவ' என்ற ஒன்பதுக்கும் இதற்கும் தொடர்பு உண்டா?*

அறுபத்தொன்பது தடவை அன்னியர் பாரதத்தின் மீது படையெடுத்து இருக்கிறார்கள். நம் பண்பாட்டை அழிக்க முயன்று இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு தடவையும் பாரதம் புத்துணர்வுடன் மறுபிறப்பு எடுத்திருக்கிறது. ஆகவே பாரதத்தை நவபாரதம் என்று கூறும் போது புதிய பாரதம் என்ற பொருளில் அச்சொல்லைப் பயன்படுத்துகிறோம். இதுபோன்ற ஒரு குழப்பம் நெல்லை மாவட்டத்தில் நவகைலாச விஷயத்திலும் ஏற்பட்டது. அவற்றுக்கு மாற்றாக ஆதி கைலாசம் ஒன்பது சிவாலயங்கள் இம்மாவட்டத்தில் உண்டு. இங்கும் 'நவ' என்பது 9–ஐக் குறிக்காமல் புதியதை குறிக்கும். சனாதனம் என்ற சொல் என்றும் பழையதாய் இருப்பினும் என்றும் புதுமையாய் விளங்குவதைக் குறிக்கும். நித்யநூதன ஸநாதன என்று கூறும்போது நம் ஸநாதன தருமம் என்றும் பழையதாக இருந்தும், என்றும் புதியதாக இருப்பதைக் குறிப்பிடுகிறோம். இதுவே பாரதத்தின் இயல்பு ஆகும். இதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை முன்னிறுத்தி

'**முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே**' என்று குறிப்பிட்டார். உலகிலேயே தொன்மையான நாடு ஆகிய பாரதம் தன் புதுமைப் பொலிவு குன்றாமல் விளங்குவதை நவபாரதம் என்று நாம் குறிப்பிடுகிறோம்.

மு. வைகுண்டவேல், எட்டுகூட்டுத் தேரிவிளை, கன்னியாகுமரி மாவட்டம்

*1820) ஒரு பெண், ஆண் இருவரையும் கணவன் – மனைவி என்று முக்கிய உறவினர் சிலர் சாட்சியாக அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி தான் திருமணம். அதற்கு ஏன் இத்தகைய ஆடம்பர விழாவும், செலவுகளும் என்பதை இன்றைய சமுதாயம் ஏன்? சிந்திக்க மறுக்கிறது?*

புனிதச் சடங்குகளை எப்படிக் கொண்டாட வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடம் உண்டு. மேற்கு நாடுகளில் திருமணத்தின் புனிதத் தன்மை கெட்டு கணவன், மனைவி ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ள மறுத்த சம்பவங்கள் உண்டு. தகப்பன் குழந்தையை ஏற்க மறுத்த சம்பவங்கள் உண்டு. இது ஒரு பெரிய சமுதாயப் பிரச்சினையாகி, இங்கிலாந்தின் உள்துறை அமைச்சரான ஜாக் ஸ்ட்ரா என்பவர் குழந்தைகளுக்கு பெயர் வைக்கும் சடங்குகள் நடக்க வேண்டும்; மூன்று தெருக்கள் கூடும் முச்சந்தியில் 300 பேரைக் கூட்டி தந்தையின் மடியில் குழந்தையை உட்கார வைத்து பெயர் சூட்ட வேண்டும். இது இன்னாருடைய குழந்தை என்று உலகம் அறிய வேண்டும் என்று சட்டமே

போட்டார். மனித உறவுகள் செம்மையாக இருக்கும் வரை சடங்குகள் சமுதாயக் கூட்டம் இவற்றுக்குத் தேவையில்லை. ஆனால் குடும்பத்தினர் ஒருவரையொருவர் ஏற்க மறுத்து வெறுத்து ஒதுக்கும்போது அவர்களைத் திரும்பப் பிணைத்து வைக்கவும், சமாதானம் செய்யவும், சமுதாயத்தின் உதவி தேவைப்படுகிறது. ஆகவே திருமணம் முதலிய சடங்குகளை ஊரைக்கூட்டி விருந்திடும் வழக்கம் இவ்வாறு வந்திருக்கலாம். ஊரில் எல்லோரும் அறிய நடந்த சம்பவத்தை யாரும் மறுக்க முடியாது. வரலாற்று சமூக இயல் ஆராய்ச்சியாளர்கள குடும்பம் என்ற கட்டமைப்பு முதலிலேயே



தோன்றியது என்றும் அதன் சாத்திர சமுதாய அங்கீகாரம் ஆகிய திருமணம் பிற்பாடு ஏற்பட்ட ஒன்று என்றும் கூறுகிறார்கள். ஆகவே இத்தகைய சமுதாயச் சடங்குகளுக்கு, கூட்டங்களுக்கு ஒரு நியாயம் இருக்கவே இருக்கிறது. ஆனால் சமுதாயமும் தன் பொறுப்பு என்பதை உணர்ந்து திருமண பெண், ஆண் இவர்களுடைய பெற்றோர் மீது பெரும் செலவுச் சுமையைத் தூக்கிப் போடாமல் சுயக் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். ராஜஸ்தானத்தில் இறந்தவர் வீட்டுக்கு துக்கம் கேட்கப் போகிறவர்களுக்கு நிறைய தின்பண்டங்களைக் கொடுத்து அனுப்பும் வழக்கம் ஒரு குறிப்பிட்ட ஜாதியினரிடத்தில் இருந்தது. கடன் வாங்கி கருமாதிச் சாப்பாடு போடும் வழக்கம் பல குடும்பங்களைக் கடன்சுமையில் ஆழ்த்திற்று. இதைப் பார்த்த அச்சமுதாயத்தின் இளைஞர்கள் தாங்கள் இனி இறந்த வீட்டுக்கு தூக்கம் கேட்கப் போனால் விருந்து உண்பதில்லை என்ற சமுதாய மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள். ஆகவே திருமணத்தில் விருந்து உண்பது என்பது அன்பைக் காட்டும் அடையாளம் மட்டுமே என்பதைப் புரிந்து கொண்டு அளவோடு நிறுத்த வேண்டும். இந்த மாதிரி சடங்குகளில் மக்கள் கூட்டம், ஆதரவு தேவை தான். பொருட்செலவைக் குறைப்பது அவசியம்.

தரும ரக்ஷண சமிதி, மாநில தொண்டர் பயிற்சி முகாம், வெ. மன்னார்சாமி, பழனி மாவட்டம்

### *1821) ஆயிரம் பாவம் செய்ததால் பெண்ணாகப் பிறந்ததாகவும், ஆயிரம் புண்ணியம் செய்ததால் ஆணாகப் பிறந்ததாகவும் சொல்கிறார்கள். அதைப்பற்றி உங்கள் பதில்?*

இதைவிட அபத்தமானதும், தவறானதும் ஆன ஒரு கருத்து இருக்க முடியாது. ஸ்ரீராமகிருஷ்ணர் தனக்கு அடுத்த பிறவி ஒன்று இருக்குமானால் தான்

ஒரு பெண்ணாகப் பிறக்க வேண்டும் என்றே கூறியுள்ளார். உலக அறநூல்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்த வினோபாஜி அவர்களும் தனக்கு அடுத்த பிறவி இருந்தால் அது பெண்ணாகவே இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பெண்களைத் தன் குருவாகவும், தன் இஷ்ட தேவதையாகவும் வணங்கி மேன்மை அடைந்துள்ளார். வேதம் இறைவனை ''த்வம் ஸ்த்ரீ, த்வம் புமானஸி த்வம் குமார உதவாகுமாரீ'' என்கிறது. இதன் பொருள் இறைசக்தி பெண்ணாக இருக்கிறது, ஆணாக இருக்கிறது, குமாரனாக, குமாரியாக இருக்கிறது என்று பொருள் ஆகும். உலகத்தில் உள்ள மதங்களுள் பெண்ணை முழுமுதற் கடவுளாக ஏற்கும் மதம் ஹிந்து மதமே என்பதால் ஹிந்து மதத்தை பெண்மை மதம் என்று ஒரு அறிஞர் கூறியுள்ளார். ஆகவே பெண் பிறவி மிகப் புனிதமானது ஆகும், போற்றத் தகுந்தது ஆகும். பாரதப் பண்பாட்டுக்கு உகந்தது ஆகும். மங்கையராகப் பிறப்பதற்கே பெரும் மாதவம் செய்திட வேண்டும்.

அர்ச்சுனன், பாலக்கோடு

***1822) இந்தப் பிரபஞ்சத்தை இறைவன் மிது முதலில் படைத்து இருக்கிறார் என்பது உண்மை. ஒன்று முதல் ஆறு அறிவு வரை படைத்த பின் மனிதனை மாயை அண்டியது. படைக்கும் போதே முன் பிறவியே இல்லை. விளக்குங்கள்?***

இக்கேள்வியை வேறு விதமாகக் கூறுவதனால் மனிதனுடைய இப்பிறவி துன்பங்களுக்குக் காரணம் மறுபிறவி என்றால் முதன்முதலில் எப்படி பாவ, புண்ணியங்கள் ஏற்பட்டன என்பது ஆகும். இதற்குப் பதிலாக முதலில் தோன்றிய அறியாமை என்று பதில் செல்லுவார்கள். மூல அவித்யா என்று கூறுவது உண்டு. முதன்முதலில் பாவ, புண்ணிய செயல்களுக்குக் காரணமான அறியாமை ஏன் தோன்றியது, எப்படித் தோன்றியது இறைவன் அதை ஏன் உண்டாக்கினார் என்ற கேள்விகளுக்குப் பதில் கிடையாது. படைப்பில் ஏன் என்ற கேள்விக்கு தத்துவத்திலும் பதில் கிடையாது, விஞ்ஞானத்திலும் பதில் கிடையாது. இருப்பதை ஏற்றுக் கொண்டு அதிலிருந்து வெளிவருவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுவதுதான், நம்மால் செய்ய முடிகிற காரியம். ஆகவே அவித்தையினாலான, மாயையினாலான இப்படைப்பை அனாதி, துவக்கமே இல்லாதது என்று கூறுவார்கள். மாயை, அறியாமை, அவித்தை எப்போது தோன்றியது என்றும் சொல்ல முடியாது. இக்கேள்வியே அபத்தமானது என்பர். ஒரு மகனின் எத்தனையாவது வயதில் அவனுடைய தந்தை பிறந்தார் என்பது போன்று மாயை எப்போது தோன்றியது என்று கேட்கக்கூடாது என்பார்கள். ஸ்ரீராமகிருஷ்ணரைப் போன்ற மகான்களும் இவ்வுலகத் துன்பங்களில் இருந்து விடுபடும் வழியையே நாம் கண்டுபிடிக்க வேண்டும். துன்பம் எப்படித் தோன்றியது, ஏன் தோன்றியது என்று ஆராய்ச்சிகள் நடைமுறை பயன் ஏதும் அற்றவை என்று கூறி உள்ளார்கள். ஞான மார்க்கத்தினாலும், தொண்டினாலும், பக்தியினாலும் மன உறுதியினாலும் நமக்குள் இருக்கும் பரம்பொருளை அடையாளம் கண்டுகொள்வதே பிரச்சினைக்குத் தீர்வு.

# இதயத்தைத் திருடும் இனிய கதைகள்

## 1718) பிரஹலாதனின் புனிதக் கதை

ஹிந்து தருமத்தில் பக்தர்கள் வரிசையில் பிரஹலாதனின் புனிதப் பெயர் எப்போதும் முதலில் கூறப்படுகிறது. பக்திக்கு இலக்கணமாகவும் எவ்வளவு துன்பம் வந்தாலும் இறை நினைவு மாறாதவனாகவும் பிரஹலாதன் விளங்கினான். அவன் பெயரைச் சொன்னாலே மிக உயர்ந்த பக்தி நம் நினைவுக்கு வரும். இக்கதையை ஓதி நம்மை நாமே புனிதப்படுத்திக்கொள்வோமாக!

பாட்டி பொன்னம்மாள் கதை சொல்வதில் வல்லவள். அவளுக்கு விஜயன், விமலா, விகடன், வினயா என்று நான்கு பேரக்குழந்தைகள் இருந்தார்கள். ஒருநாள் இரவு உணவுக்குப் பின் குழந்தைகள் பாட்டி பொன்னம்மாளைச் சூழ்ந்து கொண்டு உட்கார்ந்தார்கள். விஜயன் பாட்டி எனக்கு ஒரு யானைக் கதை சொல்லு என்று கேட்டான். விமலா பாட்டி எனக்கு ஒரு பூனைக் கதை சொல்லு என்று கேட்டாள். விகடன் எனக்கு ஒரு பானைக் கதை சொல்லு என்று கேட்டான். வினயா எனக்கு ஒரு சேனைக் கதை சொல்லு என்று கேட்டாள். பாட்டி ''எல்லோருடைய ஆசையையும் ஒரே கதையில் நிறைவேற்றி விடுகிறேன். இந்தக் கதையில் சேனை வரும், பானை வரும், பூனை வரும், யானை வரும்'' என்றாள். குழந்தைகள் ஆவலுடன் கதை கேட்கத் தயாராயினர்;

ஹிரண்யகசிபு என்ற ஒரு அரக்கன் இருந்தான். அவன் இறை நம்பிக்கை இல்லாதவன், கடவுளை வெறுப்பவன். கருணை இல்லாதவன், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்பவன். அவனுடைய மனைவியின் பெயர் **கயாது** என்பது ஆகும். **கயாது** கருவுற்றிருந்த போது அரண்மனைத் தோட்டத்தில் மிகுந்த கவலையுடன் உட்கார்ந்து இருந்தாள். எப்போதும் நல்ல கருத்துக்களையே பிரச்சாரம் செய்யும் நாரதமுனி அங்கு வந்தார்; ''என்ன கயாது. ஏன் கவலையுடன் இருக்கிறாய்?'' என்று கேட்டார். கயாது பதில் சொன்னாள். ''குருவே! நான் எப்போதும் பக்தியில் ஆழ்ந்து இருப்பவள். என்ன காரியம் செய்தாலும் இறைவனை நினைத்தே



தொடங்குவேன். இப்போது நான் கருவுற்றிருக்கிறேன். எனக்குப் பிறக்கப் போகும் குழந்தை என்னுடைய கணவரின் துர்க்குணங்களைக் கொண்டிருக்கக் கூடாது. கருணை, பக்தி, பகவானிடத்தில் அன்பு ஆகிய தலையாய நற்குணங்கள் என் குழந்தையிடம் இருக்கவேண்டும். பக்தி என்றாலே ஒரு உதாரணமாகப் பிறருக்கு விளங்கும் வண்ணம் என் குழந்தை வளர வேண்டும். இதற்கு நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டாள். நாரதர் அவளுக்கு ஆறுதல் கூறினார். ''கயாது வருத்தப்படாதே. நரனுக்கு நல்வழி காட்டும் நாராயணன், உயிர்களில் எல்லாம் உயிராக உறைந்து இருக்கும் வாசுதேவன் உனக்கு அருள்புரிவான். அவனை நீ பக்தியுடன் வேண்டி, பிரார்த்தனை செய்வாயாக!'' என்று நாரதர் கயாதுவுக்கு ஒரு கதை சொன்னார்.

தருமபுரம் என்ற ஊரில் அறம் வளத்தான் என்றொரு குயவன் இருந்தான். அவனுடைய மனைவி லக்ஷ்மி ஆவாள். அவர்கள் பானை வனைந்து விற்பனை செய்து பிழைப்பு நடத்தி வந்தனர். அவர்களுக்குக் குழந்தையே இல்லை. பகவான் நாராயணனை வேண்டி அவர்கள் எப்போதும் தங்கள் கடமைகளை செய்து வந்தனர். அவர்களுடைய அன்புக்கு வடிகாலாக வீட்டில் ஒரு பெண் பூனை வசித்து வந்தது. காலப்போக்கில் அந்தப் பெண் பூனை ஒரு அழகான குட்டி போட்டது. அறம் வளர்த்தானும், லக்ஷ்மியும் பூனையையும், குட்டியையும் பாலூட்டி வளர்த்து வந்தனர். எப்போதும் நாராயணர் நாமத்தைச் சொல்லி அவர்கள் பூனைக் குட்டிக்குப் பாலூட்டுவர். பூனையும் மியாவ் என்று கத்துவது, நாராயண நாமத்தை உச்சரிப்பது போலவே இருக்கும். ஒருநாள் நூற்றுக்கணக்கான பானைகளை உருவாக்கிய அறம் வளர்த்தான் அவற்றை வெயிலில் காய வைத்திருந்தான். லக்ஷ்மி அவனுக்கு கூட, மாட உதவி செய்து வந்தாள். நாள் முழுவதும் பானை வெயிலில் காய்ந்ததும் அவற்றை சூளையில் இட்டு சுட்டுப் பதப்படுத்த அவர்கள் முனைந்தார்கள். பானைகள் உடைந்து விடாமல் இருக்க அவற்றின் மீது உமியை நிறையத் தூவினார்கள். பானைகள் உடையாமல் அடுக்கினார்கள். அப்போது பூனைக்குட்டி அங்கும் இங்கும் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. லக்ஷ்மி அவ்வப்போது பூனைக்குட்டியை விரட்டுவதிலும் பானைகளை அடுக்குவதிலும் கவனம் செலுத்தி வந்தாள். பானைகளையெல்லாம் அடுக்கி வைக்கோலைப் போட்டு மூடி களிமண்ணால் மேலே பூசி சூளையில் நெருப்பு வைத்துவிட்டு கணவனும், மனைவியும் சாப்பிடப் போய்விட்டார்கள். அவர்கள் சாப்பிடும்போது இறைநாமத்தை கூறிக்கொண்டே சாப்பிட்டார்கள். பிறகு படுத்து உறங்கி விட்டார்கள். இரவு மணி 12 இருக்கும். அறம் வளர்த்தானின் பெரிய பூனை அவர்கள் காலை பிராண்டிற்று. தீனக்குரலில் சத்தம் போட்டது. இரண்டுபேரும் திடுக்கிட்டு எழுந்து பார்த்தார்கள். பூனை அவர்களைச் சுற்றிச்சுற்றி அழுகைக் குரலில் கத்திக் கொண்டே ஓடி வந்தது. அதன் குட்டிக்கு ஏதாவது அடிபட்டிருக்குமோ என்று லக்ஷ்மி பார்த்தாள். பூனைக்குட்டியை அருகில் காணோம். வீட்டைச் சுற்றி வழக்கமாக குட்டி படுத்திருக்கும் இடங்களில் எல்லாம் பார்த்தார்கள். சாம்பல் மேடு, புளிப் பானை, கிணற்றடி எந்த இடத்திலும்

பூனைக்குட்டியை காணோம். லக்ஷ்மி 'ஓ' என்று அழ ஆரம்பித்து விட்டாள். ''நாராயணா, பகவானே, வாசுதேவா நான் சூளையில் பானைகளை அடுக்கும்போது குட்டிப்பூனை இங்கும் அங்கும் குதித்துக் கொண்டிருந்தது. தப்பி தப்பி ஏதாவது ஒரு பானையில் தூங்கிப் போய் இருந்தால் அந்தப் பானையை தூக்கி சூளையில் வைத்திருப்பேனே. பகவானே காப்பாற்று!'' என்று தீனக்குரலில் லக்ஷ்மி ஓலமிட்டாள். அவளுடைய அழுகையை அறம் வளர்த்தானால் தாங்க முடியவில்லை. ''லக்ஷ்மி! பூனைக்குட்டி அங்கே, இங்கே ஓடி இருக்கும். பானையில் ஒளிந்து இருக்காது. அப்படியே ஒளிந்து இருந்தாலும் நாம் என்ன செய்ய முடியும்? ஒரு பூனைக்குட்டிக்காக நூறு பானைகளை அரை வேக்காட்டில் சூளையைத் திறந்து எடுக்க முடியுமா? சூளையைத் திறந்தாலும் பூனைக்குட்டி பிழைத்து இருக்குமா? அதன் ஆத்மா சாந்தியடைய நாராயணனை வேண்டிக் கொள்வோம்'' என்று கூறிவிட்டுப் படுத்து விட்டான். லக்ஷ்மிக்கும், தாய்ப் பூனைக்கும் இருப்பு கொள்ளவில்லை. பூனைக்குட்டி பிழைத்து இருக்கிறதா என்று எல்லா இடங்களிலும் தேடித்தேடிப் பார்த்தார்கள். காலையில் பொழுது விடிந்தது. லக்ஷ்மியும், தாய்ப் பூனையும் தூங்கவே இல்லை. அறம் வளர்த்தான் சூளையைப் பிரித்தான். தண்ணீர் தெளித்தான். பானைகளைக் குளிரவிட்டான். கை பொறுக்கும் பதத்துக்கு பானைகள் குளிர்ந்தன. ஒவ்வொன்றாக பானைகளை எடுத்து வெளியே வைத்தான். சில பானைகள் அதிக வெப்பத்தில் நீலம் பாய்ந்து கறுத்திருந்தன. சில பானைகள் கோணி இருந்தன. சில உடைந்திருந்தன. நல்ல பானைகளை எடுத்துத் தனியே வைத்தான் அறம் வளர்த்தான். கிட்டத்தட்ட எல்லா பானைகளையும் பார்த்து விட்டான் அவன். அப்போது என்ன ஆச்சரியம், ஒரு பூனைக் குட்டியின் மியாவ் சத்தம் ஒரு பானையில் இருந்து வந்தது. தப்பித்தவறி ஏதாவது ஒரு பானையை சூளைக்குள் வைக்க விட்டு விட்டோமோ, அந்தப் பானைக்குள் குட்டிப்பூனை ஒளிந்து கொண்டதோ என்று உற்றுப் பார்த்தான் அறம் வளர்த்தான். அப்போது லக்ஷ்மியும் அங்கு ஓடி வந்தாள். நன்கு வெந்திருந்த அந்தப் பானைக்குள் பூனைக்குட்டி உயிருடன் இருந்ததைப் பார்த்து அவள் மயங்கி விழுந்தாள். தாய்ப் பூனையும் குட்டியை நாக்கால் நக்கிக் கொண்டது. வாயால் கவ்விக் கொண்டது. அறம் வளர்த்தானுக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை. ''நீ இரவு முழுவதும் நாராயண நாமத்தை சொல்லிக் கொண்டிருந்தாய் அல்லவா. அந்த நாமத்தின் மகிமை தான் இப்பூனைக் குட்டியை சூளை நெருப்பிலும் சாகாமல் காப்பாற்றி விட்டது'' என்று கூறினான். லக்ஷ்மி ஓடிப்போய் ஒரு தட்டில் பாலூற்றிக் கொண்டு வந்தாள். பூனைக் குட்டியை குடிக்க விட்டாள். நாராயணனை நெஞ்சார கணவனும், மனைவியும் துதித்தார்கள்.''

இக்கதையைக் கேட்ட விஜயன், விமலா, விகடன், வினயா எல்லோரும் அழத் தொடங்கி விட்டனர். பிறகு மனம் தேறி ''பாட்டி! பகவான் அன்பு வடிவானவர். பூனையைக் காப்பாற்றி விட்டார்'' என்று கைதட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பொன்னம்மாள் பாட்டி கதையைத் தொடர்ந்தாள். இந்தக் கதையை கயாது ராணிக்கு சொன்ன நாரதர் அவளைத் தேற்றினார். ''ராணியே நீ கவலைப்படாதே. சூளையின் நெருப்பில் இருந்த பூனைக்குட்டியை காப்பாற்றிய

பகவான் உன் கருவில் இருக்கும் குழந்தையினை கெட்ட எண்ணங்கள், தந்தையின் பாவம் தீண்டாமல் பாதுகாப்பார். எப்போதும் நீ நாராயண நாமத்தை சொல்லிக் கொண்டிரு. உடல்கள் தோறும் உயிராய் விளங்கும் வாசுதேவனை போற்று. அருள் மழை பொழியும் பகவானைப் பாடு'' என்று கூறினார்.

கயாதுவின் இறை நம்பிக்கையும், பிரார்த்தனையும் வலுவாயின. ''இறைவா! என் கணவர் பிற உயிர்களுக்கு எவ்வளவு தீமை செய்தாலும் அந்தப் பாவம் என் குழந்தையை தீண்டக்கூடாது. என் குழந்தை இறை பக்தியும், கருணையும், நல்லொழுக்கமும் கொண்டு வளர வேண்டும்.''

மறுபுறம் கயாதுவின் கணவனாகிய ஹிரண்ய கசிபு கடும் தவத்தில் ஈடுபட்டான். அவன் முன் பிரம்மா தோன்றி அவன் தவத்தைப் பாராட்டினார். ''ஹிரண்ய கசிபுவே உன் தவத்தை மெச்சினேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்'' என்று சொன்னார். ஹிரண்ய கசிபு தன் வரத்தை வெளியில் சொன்னான். ''பிரம்மாவே. தாங்கள் படைத்த உயிர்கள் எதனாலும் எனக்கு மரணம் ஏற்படக்கூடாது. எனக்கு மரணம் பகலிலோ, இரவிலோ ஏற்படக்கூடாது. எனக்கு சாவு மண்ணிலும் வரக்கூடாது. விண்ணிலும் வரக்கூடாது. என்னை மனிதனாலும் கொல்ல முடியாமல், மிருகத்தாலும் கொல்ல முடியாமல் நான் பலம் பெற்றிருக்க வேண்டும். எந்த ஆயுதமும் என்னைக் கொல்லும் திறமை கொண்டிருக்கக்கூடாது. உயிருள்ளவையோ,



உயிரற்றவையோ என்னைக் கொல்லக்கூடாது. தேவர்களோ, அசுரர்களோ பெரிய பெரிய நாகப்பாம்புகளோ என்னைக் கொல்ல முடியாமல் போகவேண்டும். எதிரியும் என்னை எதிர்த்துப் போரில் நிற்கக்கூடாது. நான் உலகத்திற்கே சக்கரவர்த்தியாக விளங்கவேண்டும்'' என்று ஹிரண்ய கசிபு வேண்டிக் கொண்டான். ''அரியதும், பெரும் தவத்தினால் பெறத் தகுந்ததுமான இந்த வரத்தை உனக்குத் தந்தேன்'' என்று பிரம்மா கூறிவிட்டு மறைந்தார்.



பிரம்மாவிடம் இருந்து வரம் பெற்ற ஹிரண்ய கசிபு உலகத்து உயிர்களையெல்லாம் துன்புறுத்தலானான். அவன் உடல் தங்கத்தைப் போல ஒளி வீசியது. மூவுலகத்தையும் வென்று தன்வசப்படுத்திக் கொண்டான். இந்திரனைத் துரத்திவிட்டு அவனுடைய அரண்மனையில் போய் உட்கார்ந்து கொண்டான் ஹிரண்யகசிபு. தேவர்களாகிய நல்லவர்கள் எல்லோரும் அவனுக்குத் தொண்டுபுரிய வேண்டியதாயிற்று. இயற்கை முழுவதையும் தன்வசப்படுத்திக் கொண்டு அவற்றின் விதிமுறைகளையெல்லாம் தாறுமாறாக மாற்றிப் போட்டான் ஹிரண்யகசிபு. தேவர்கள், மனிதர்கள், கந்தர்வர்கள், அப்சராக்கள், சித்தர்கள், வித்யாதரர்கள் எல்லோரும் துன்பத்தால் வாடிப் போயினர். அவர்கள் எல்லோரையும் வேலை வாங்கினான் ஹிரண்யகசிபு. அவர்கள் எல்லோரும் மகாவிஷ்ணுவிடம் போய் பிரார்த்தித்தார்கள், கெஞ்சினார்கள், சரண் அடைந்தார்கள். தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கையெடுத்துக் கும்பிட்டார்கள். மகாவிஷ்ணு அவர்களுக்கு அருள் தந்தார். ''தேவர்குலத் தலைவர்களே பயப்படாதீர்கள். உங்களுக்கு மகிழ்ச்சியும், வளமும் உண்டாகட்டும். யார் ஒருவன் தேவர்களை வெறுக்கிறானோ, வேதங்களை அவமதிக்கிறானோ புனித மனிதர்களைத் துன்புறுத்துகிறானோ, கள்ளமறியா உயிர்களைக் கஷ்டப்படுத்துகிறானோ, அறத்தை மீறுகிறானோ, தெய்வத்தை இகழ்கிறானோ அவனுடைய அழிவுக்காலம் வந்துவிட்டது என்று உணருங்கள்'' என்று பகவான் விஷ்ணு அவர்களிடம் கூறினார்.



காலப்போக்கில் கயாது அழகிய ஆண் குழந்தையைப் பெற்று எடுத்தாள். பேரானந்தத்தை உடையவன், பேரானந்தத்தை தருபவன் என்ற பொருளில் அவனுக்கு பிரஹலாதன் என்று பெயரிட்டனர் பெரியோர். அரக்கர் குலத்தில் பிறந்தாலும் பிரஹலாதன் நற்குணங்களின் உருவகமாக விளங்கினான். அவன் முனிவர்களிடம் அன்பு பூண்டு ஒழுகினான். அவனுடைய நன்னடத்தை பிறருக்கு உதாரணமாகத் திகழ்ந்தது. அவன் தன்னுடைய ஐம்புலன்களை அடக்கி ஆண்டான். எல்லா உயிர்களையும் அவனை தன்னைப் போலவே நேசித்தான். ஒவ்வொருவரும் பிரஹலாதனை தங்களுடைய நண்பனாகவே கருதினர். அவன் ஞானிகளுக்கும், புனிதர்களுக்கும் சேவகனைப் போல தொண்டு புரிந்தான். ஏழைகளை நேசித்தான். துன்புற்றோரை, அவன் தந்தை தாய் போல் காப்பாற்றினான். சமமானவர்களிடம் சகோதரன் போல் பழகினான். தன்னுடைய ஆசிரியர்களை அவன் தெய்வமாகவே நினைத்துத் தொழுதான். கல்வியும், செல்வமும், அழகும், உயர்குடி பிறப்பும் அவனிடம்

இருந்தாலும் அவனிடம் ஆணவமோ, பெருமிதமோ சிறிதும் கிடையாது. உலக இன்பங்கள் வந்து வந்து செல்பவை என்று அவன் உணர்ந்து இருந்தான். துன்பங்களில் அவன் மனம் கலங்காது இருந்தான். அவனிடத்தில் எந்த ஆசையும் கிடையாது. அகண்ட பிரம்மச்சரீயத்தை அவன் பின்பற்றினான். தன்னுடைய புலன்களையும், மூச்சையும், உடலையும், அறிவையும், பிரஹலாதன் அடக்கி ஆண்டான். அவன் அசுரகுலத்தில் பிறந்து இருந்தாலும் அசுர குணம் எதுவுமே அவனிடத்தில் கிடையாது. அவன் மனம் எப்போதும் வா சு தே வ னா ம் நாராயணனிடத்தில் ஆழ்ந்து இருந்தது. எப்போதும் அவன் கோவிந்தனையே கட்டித் தழுவிக் கொண்டிருப்பதாக உணர்ந்தான்.



பிரஹலாதன் கல்வி கற்கும் வயது வந்தது. அசுரர்களின் குலகுரு சுக்கிராச்சாரியார் ஆவார். அவருக்கு சண்டன், அமர்க்கன் என்ற இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களிடம் பிரஹலாதனை கல்வி கற்க அனுப்பினான், தந்தை. மற்ற அசுரக் குழந்தைகளும் பிரஹலாதனின் வகுப்புத் தோழர்களாக பள்ளிக்குச் சென்றார்கள்.

ஹிரண்யகசிபுவின் சகோதரனான ஹிரண்யாட்சனை மகாவிஷ்ணு கொன்று விட்டார். இதனால் மகாவிஷ்ணுவின் பெயரில் ஹிரண்யகசிபுவுக்கு கடும் கோபம் இருந்தது. தன் மகன் திருமாலைப் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பிரஹலாதனை வளர்க்க அவன் முற்பட்டான். ஆனால் ஆசிரியர்கள் கூறியது எதுவும் பிரஹலாதன் அறிவில் ஏறவில்லை. அவன் எப்போதும் பகவான் விஷ்ணுவையே நினைத்துக் கொண்டிருந்தான். ஒருநாள் ஹிரண்யகசிபு, பிரஹலாதனை தன்னுடைய மடிமீது உட்கார்த்தி வைத்துக் கொண்டு கேட்டான். ‘‘மகனே உலகில் உண்மையானது எது? நல்லது எது?’’ இதற்கு பிரஹலாதன் சொன்ன பதில் தந்தையையே திடுக்கிட வைத்தது. பிரஹலாதன் கூறினான். ‘‘அரக்கர் குல மன்னனே. ஸ்ரீ ஹரி, விஷ்ணு பகவான் தான், நாராயணன் தான் உலக உயிர்களின் துன்பத்தையெல்லாம் போக்கவல்லவர். அவரே சத்தியமானவர், நல்லவர்’’ என்றான் குழந்தை.

இதைக் கேட்டதும் ஹிரண்யகசிபுவுக்கு முதலில் சிரிப்பும், பிறகும் கோபமும் வந்தது. தன் மகனின் ஆசிரியர்களைக் கூப்பிட்டு ‘‘விஷ்ணு பக்தர்கள் யாரும் இந்தப் பக்கமே வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். பையனின் மனத்தை அவர்கள் கெடுத்து விட அனுமதிக்காதீர்கள்’’ என்று எச்சரித்தான்.

சண்டனும், அமர்க்கனும், பிரஹலாதனை தனியே அழைத்து அவன்

மனத்தை மாற்ற முயன்றனர். ஆனால் பிரஹலாதனும் விஷ்ணு பக்தியில் உறுதியாய் இருந்தான். அவனுடைய ஆசிரியர்கள் அவனுக்கு அறம், பொருள், இன்பம் பற்றிய பாடங்களையே திரும்பத்திரும்பச் சொல்லிக் கொடுத்தார்கள். இறைவனைப் பற்றிய, நற்குணம் பற்றிய, வீடுபேறு பற்றிய பாடங்களை அவர்கள் போதிக்கவே இல்லை. சிறிது காலம் கழிந்தது. தாங்கள் சொல்லிக் கொடுத்த பாடங்கள் பிரஹலாதனின் மனத்தை மாற்றி இருக்கும் என்று ஆசிரியர்கள் நினைத்தார்கள். அவனுடைய தாயார் அவனை குளிப்பாட்டி, உடை அணிவித்து, அலங்காரம் செய்தாள். அவன் சென்று தந்தையை வணங்கினான். ஹிரண்யகசிபு அவனை நெஞ்சாரத் தழுவி மடியில் உட்கார்த்தி முத்தமிட்டு கண்ணீர் சொரிந்து கொஞ்சினான். ''ஓ பிரஹலாதா, அன்புக் குழந்தையே, நீண்டநாள் உயிர் வாழ்வாயாக! உன்னுடைய ஆசிரியர்கள் போதித்த நல்லநல்ல பாடங்களையெல்லாம் எனக்குச் சொல்லிக் காண்பி, பார்ப்போம்.'' பிரஹலாதன் பதில் சொன்னான். ''விஷ்ணுவின் புகழைக் காதால் கேட்பது, நாராயணன் புகழை நாவால் பாடுவது, மாலின் பெருமையை மனத்தால் நினைப்பது, கண்ணனுக்குத் தொண்டு கையால் செய்வது, நாராயணனை எப்போதும் வழிபடுவது, நாராயணனை நமஸ்காரம் செய்வது. நாராயணனுக்கு நான் அடிமை, நாராயணனுக்கு நான் நண்பன், இப்படி பலவிதத்திலும் ஹரிக்கு அன்பு பூண்டு வாழ்வதே வாழ்வின் லட்சியம் ஆகும்.''

எதிர்பாராத இந்தப் பதிலால் ஹிரண்யகசிபு திடுக்கிட்டான். கோபத்தால் அவன் கண்கள் சிவந்தன. ''தகுதி இல்லாத வக்கிரபுத்தி கொண்ட ஆசிரியர்களே, என் பகைவனான விஷ்ணுவை வணங்கவா என் மகனுக்குப் பாடம் கற்பித்தீர்கள்?'' என்று அவன் கூச்சல் இட்டான். ஆசிரியர்கள் பதில் சொன்னார்கள். ''மன்னவா! உங்கள் மகனிடம் விஷ்ணு பக்தி இயல்பாகவே ஊறி இருக்கிறது. கோபத்தை அடக்குங்கள். எங்களைக் குற்றம் சொல்லாதீர்கள்.''

ஹிரண்யகசிபு தன் மகனை திரும்பத்திரும்பக் கேள்விகள் கேட்டான். ஆனால் ஒவ்வொரு தடவையும் பிரஹலாதனின் வாயில் இருந்து வாசுதேவனின் புகழ்ச் சொற்களே வெளி வந்தன. நாராயணா என்ற நாமங்களையே அவன் நவின்றான். புருஷோத்தமனின் புகழையே அவன் புகன்றான். அவன் இதயமும் அறிவும், சொல்லும் எப்போதும் நாராயணனின் நற்குணங்களையே புகழ்ந்து பேசின.

இதையெல்லாம் கேட்ட ஹிரண்யகசிபு கோபத்தினால் பைத்தியம் பிடித்தவன் போல் ஆனான். பிரஹலாதனை தன் மடியில் இருந்து தள்ளி விட்டான். ''ராக்ஷர்களின் சேனையைக் கூப்பிடுங்கள். இந்தச் சிறுவனை இங்கிருந்து அழைத்துச் செல்லுங்கள். அவனைக் கொல்லவும் தயங்காதீர்கள். இவனுக்கு ஐந்து வயது ஆகும் போதே பெற்றோரைப் புறக்கணித்துவிட்டு விஷ்ணுவைப் போற்றுகிறானே'' என்று தன் சேனையை அழைத்து அவர்களிடம் பிரஹலாதனை ஒப்படைத்தான். அந்த அரக்கர் சேனை கூர்மையான

நகங்களுடனும், கொடுமை தோன்றும் முகத்துடனும், பார்ப்பதற்கே பயங்கரமாகத் தோற்றம் அளித்தது. அவர்கள் ''கிழி வெட்டு'' என்று கூச்சல் போட்டுக் கொண்டே அவனுடைய உயிர் மையங்களைத் தங்கள் சூலங்களால் குத்தினார்கள். ஆனால் ஹரியின் நாமத்தை ஓதிக் கொண்டே இருந்த பிரஹலாதனை அந்தச் சூலங்கள் ஒன்றும் செய்யவில்லை.



பிரஹலாதனை கொல்ல அரக்கர் சேனை செய்த முயற்சிகள் தோற்றுப் போனதைப் பார்த்து ஹிரண்யகசிபுவுக்கு மிகுந்த கோபமும், வருத்தமும், கவலையும் உண்டாயின. அவன் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு பக்த சிறுவனைக் கொல்ல முயற்சி செய்தான். பெரிய பெரிய யானைகளை ஏற்றி பிரஹலாதனை மிதிக்கச் செய்தான். பிரஹலாதனோ அந்த



யானைகளைப் பார்த்து ''மகாவிஷ்ணுவின் பக்தனாகிய கஜேந்திரனின் குலத்தவர் நீங்கள். திருமால் யானை வாகனத்திலும் வருபவன்'' என்று துதித்தான். அந்த யானைகள் பிரஹலாதனை ஒன்றுமே செய்யாமல் திரும்பிப் போய் விட்டன.

அடுத்து கொடிய நச்சுப் பாம்புகளை ஏவி பிரஹலாதனை கடிக்கும்படி அரக்கர்கள் செய்தார்கள். பிரஹலாதன் விஷ்ணுவை துதித்து ''காளிங்கனின் தலைமேல் நடனமாடிய பெருமாளே! ஆதிசேடனின் மீது படுத்துறங்கும் ஆதிதேவா'' என்றெல்லாம் துதி பாடினான். பாம்புகளின் நஞ்சு பிரஹலாதனைக் கொல்லாமல் விட்டுவிட்டது.



அடுத்தது அரக்கர் சேனை ஏவல், பில்லி, சூனியம், கருப்பு பிசாசு முதலிய மாயாஜாலங்களைச் செய்து பிரஹலாதனை கொல்லப் பார்த்தனர். பிரஹலாதன்

விஷ்ணுவை வணங்கி ‘‘மாயைக்கெல்லாம் அதிபதியே, மாயாவியே, மாயையை தன் வசத்தில் வைத்திருக்கும் மகேஷ்வரனே’’ என்று போற்றி வழிபட்டான். அந்த மாயாஜாலங்கள், பூதப்பிசாசுகள், பிரஹலாதனின் முன்நிற்க முடியாமல் தோற்றுத் திரும்பின.



அடுத்து கொடுமையான அரக்கர்கள் பிரஹலாதனை செங்குத்தான மலை உச்சிக்குக் கொண்டு சென்றனர். மலையில் இருந்து அச்சிறுவனை உருட்டிக் கீழே தள்ளினர். பிரஹலாதனோ ‘‘நகதர! கிரிதாரி! பிருந்தாவனத்தில் மலையை தூக்கிய மாமன்னா, மலை மேல் வாழும் மாமலை வாசா, மலைவண்ணனே’’ என்றெல்லாம் விஷ்ணுவைப் போற்றி புகழ்ந்தான். தாயின் மடியில் விளையாடும் குழந்தையைப் போல அவன் உடலில் எந்தக் காயமும் படாமல் எழுந்து வந்தான்.

இதைப்பார்த்த ஹிரண்யகசிபுவுக்கும், ராட்சதர்களுக்கும் கோபம் அதிகரித்தது. பிரஹலாதனை கொடூரமான இருட்டுச் சிறையில் அவர்கள் அடைத்துப் போட்டனர். அப்பாலகனோ ‘‘கண்ணா, தேவகி மைந்தா, நீ பிறந்ததும் கடும் சிறையில் அல்லவா, சிறை உன் கோவில் ஆகும், உன் பிறப்பிடம் ஆகும்’’ என்று பகவானைப் பிரார்த்தித்தான். சிறையும் ஒளி பெற்றுத் திகழ்ந்தது.



அடுத்து அரக்கர் படையினர் நெருப்பு கொழுந்து விட்டெரியும் நீல விஷத்தை ஒரு கோப்பையில் கொண்டு வந்தனர். பிரஹலாதனின் வாயைத் திறக்கச் செய்து அக்கொடிய நஞ்சை உள்ளே புகுத்தினர். பிரஹலாதனோ ‘‘நீலவண்ணா, நஞ்சின் நிறத்தவனே, சிவபெருமானின் தொண்டையில் இறங்கமல் நஞ்சை, பார்வதி வடிவம் எடுத்து நிறுத்திய திருமாலே’’ என்று பிரார்த்தனை செய்தான். அந்த நஞ்சும் அவனை ஒன்றும் செய்யவில்லை.

அடுத்து அரக்கப்படையினர் பிரஹலாதனைப் பட்டினி போட்டுக் கொன்று விட முயற்சி செய்தனர். பிரஹலாதன் திருமாலை வேண்டி ‘‘உன்னுடைய பக்தர்கள் ஏகாதசி அன்று உன்னை வேண்டிப் பட்டினி கிடந்தாலும்

அவர்களுக்கு பலம் தான் கிடைக்கிறது. அசோகவனத்தில் சீதாதேவி பட்டினி கிடந்தபோது தேவர்கள் அமுதத்தை அவளுக்கு ஊட்டவில்லையா''! என்றெல்லாம் வேண்டிக் கொண்டான். பட்டினியால் அவன் உடலில் மெருகு ஏறிற்று. அழகு அதிகரித்தது.

அடுத்து அரக்கப்படையினர் ஹிரண்யகசிபுவின் உத்தரவின் பேரில் புயல், கொடு மழை, ஆலங்கட்டி மழை, கடுமையான குளிர் ஆகிய மோசமான சூழலை உண்டு பண்ணினர். ஆனால் பிரஹலாதனோ, ''சுகத்தையும், துக்கத்தையும், சமமாக நினைப்பவனே. குளிரையும், வெப்பத்தையும் சரி சமமாக போக்குபவனே. இருட்டையும், பகலையும் ஒப்ப உணர்பவனே ''என்று திருமாலைத் துதித்தான். அந்த மழையும், காற்றும், அவனை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டன.



அடுத்து பெரிய பெரிய மரக்கட்டைகளைப் போட்டு நெருப்பை அரக்கர்கள் மூட்டினார்கள். அருகில் செல்லவே அஞ்சும் வண்ணம் வெகுதூரம் நெருப்பு சுட்டது. ஆனால் பிரஹலாதனோ ''அக்னி வண்ணனே, பஞ்ச பூதங்களின் நெருப்பாக இருப்பவனே. நெருப்புச் சுடரென ஒளி வீசுபவனே. ஏழு நாக்குகளால் ஆன நெருப்பைப் போல் தூயவனே'' என்றெல்லாம் விஷ்ணு பகவானை வேண்டிக் கொண்டான். நெருப்பும் அவனை குளிர் காய்பவனைப் போல் இதமாக வருடித் தந்தது.

அடுத்தது கடும் வேகமாக வீசும் புயல் ஒன்றை அரக்கர்கள் அவன்மீது ஏவி விட்டார்கள். பெரிய பெரிய மரங்களெல்லாம் வேரோடு பிடுங்கப்பட்டு விழுந்தன. புழுதிப் புயல் வீசிற்று. பிரஹலாதனோ ''புயல் வண்ணா, கார்வண்ணா, மேகவண்ணா'' என்று விஷ்ணுவை துதித்து தன்னைக் காத்துக் கொண்டான். அடுத்து பெரு வெள்ளம் ஒன்று பிரஹலாதனை அடித்து தூக்கிக் கொண்டு போய் அமிழ்த்தி விட முயற்சி செய்தது. பிரஹலாதனோ பாற்கடல் மேல் பள்ளி கொண்ட பரந்தாமனைத் துதித்து, தப்பித்துக் கொண்டான். இவ்வளவு செய்தும் சாகாத பிரஹலாதனின் மானம் போகும்படி ராட்சதப் படையினர் வசை பாடினர், நிந்தித்தனர். திருமாலைத் தூற்றினர். பிரஹலாதனோ அவற்றையெல்லாம் துதியாகவே நினைத்து மகிழ்ச்சியுடன் கேட்டுக் கொண்டிருந்தான். அந்த வசவுடன் அவன் மனத்தில் சிறு மாற்றத்தையும் கொண்டு வரவில்லை.

இவ்வளவு செய்தும் அசைந்து கொடுக்காத பிரஹலாதனைப் பிரஹலாதனை பார்த்து ஹிரண்யகசிபு ஒளி இழந்து கவலையுடன் முகத்தை

கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். சுக்கிராச்சாரியாரின் மகன்களான சண்டனும், அமர்க்கனும் பிரஹலாதனை வருண பாசத்தில் கட்டிப் போட்டனர். ராஜ தருமத்தை உபதேசித்தனர். மோட்ச மார்க்கத்தை விட்டு விடும்படி எடுத்துக் கூறினார். உலக வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்கும்படி வற்புறுத்தினர். ஆனால் பிரஹலாதன் மனமோ திருமாலின் தாமரைத் திருவடிகளையே பற்றி நின்றது. அவன் உலக இன்பங்கள், உலகச் சொத்துக்களுடன் வாழ்க்கை இவற்றையெல்லாம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை. மாற்றாக உலகைத் துறந்து இறைவனைப் பற்றும்படி தன் தந்தைக்கும், அரக்க சேனைக்கும் உபதேசம் செய்தான் அப்பச்சிளம் பாலகன். அவன் சொன்னான். ''அரக்கர் குழந்தைகளே! அச்சுதனை திருப்தி செய்வது எளிது. பகவானே நமக்கு மிகவும் அருகில் இருப்பவர். அன்புக்குரியவர். பாகவத தருமமே அனைத்திலும் உயர்ந்தது'' என்றெல்லாம் எடுத்துச் சொன்னான். ''ஆத்மாவும், உடம்பும் தனித்தனியானவை. பக்தியே பகவானை அடைய மிகச் சுலபமான வழி. செல்வம், மனைவி, மக்கள், ஆடு, மாடு, வீடு, மாளிகை, நிலம், யானை, பொக்கிஷம், அதிகாரம் இவற்றால் என்ன பயன்? உலக வாழ்க்கை இன்று இருக்கும். நாளை போகும். இந்த உடல் அழிந்தால் இதனை நாய்களும், நரிகளும் உண்ணும். ஆனால் பகவான் விஷ்ணுவோ நமக்குள்ளேயே ஆத்மாவாக வாழ்கிறார். அவரிடத்தில் பக்தி செய்யுங்கள். அவரை அரக்கர்களும் வழிபட்டிருக்கிறார்கள். யக்ஷர்களும் பகவானுக்கு ஏவல் புரிந்து இருக்கிறார்கள். பூத பிசாசுகளும், பெண்களும், எல்லாச் சாதியினரும், கோபர்களும், பறவைகளும், மிருகங்களும், பாவிகளும் கூட பகவானை வழிபட்டுள்ளனர்.'' இதையெல்லாம் கேட்ட, பார்த்த ஹிரண்யகசிபுவுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ''சிறுவா! உனக்கு இவ்வளவு பலம் எங்கிருந்து வந்தது? என்னைப் போன்ற பலசாலியை அச்சமே இல்லாமல் எதிர்க்கிறாயே! என் பார்வையாலேயே நான் பலரைக் கொன்று இருக்கிறேன். உன் பலத்தின் ரகசியம் என்ன?'' என்று கேட்டான்.

பிரஹலாதன் பதில் கூறினான். ''நான் என் தாய் கயாதுவின் வயிற்றில் இருக்கும் போது நாரதமுனி நாராயண நாமத்தை என் அன்னைக்கு உபதேசித்தார். என் கருவும், உயிரும், அறிவும், உடலும், நாராயண நாமத்தை ஜபம் செய்து கொண்டே வளர்ந்தன. என் உடலின் ஒவ்வொரு திசுவும் நாராயண நாமத்தால் புத்துயிர் பெற்றது. அதுவே என் அஞ்சாமைக்கு காரணம்'' என்று கூறினான்.

(**ஆசிரியர் குறிப்பு:** பிரஹலாதன், அபிமன்யு போன்றவர்கள் தாயின் வயிற்றில் இருக்கும் போதே ஞானம் பெற்றனர் என்று பாகவதமும், மஹாபாரதமும் கூறுகின்றன. நவீன விஞ்ஞானமும் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது. அமெரிக்காவில் செய்த ஒரு மனோ தத்துவ பரிசோதனையில் இது தெரிய வந்துள்ளது. கர்ப்பிணிப் பெண்களின் இதயத் துடிப்பின் வேகத்தில் நல்ல நல்ல ஆக்கச் சிந்தனைகளை அப்பெண்ணின் குரலில் பதிவு செய்து அக்கர்ப்பிணி பெண் இந்த ஒலிப்பதிவு நாடாவை தினம் ஒரு மணிநேரம் வயிற்றைச் சுற்றிக்

கட்டிக் கொள்ளச் செய்தனர். இவ்வெண்ணங்களுடனே வளர்ந்த குழந்தை பிறந்ததுமே தாயின் குரலை அடையாளம் கண்டு கொண்டது. நல்லறிவு உள்ள குழந்தையாக வளர்ந்தது. அந்த ஒலி நாடா கருவிக்கு **பேபி பிளஸ்** என்று பெயர் வைத்துள்ளனர். இதுபோல் பிரஹலாதனும் தாயின் வயிற்றில் இருக்கும் போதே பகவானிடத்தில் பக்தி செய்ய ஆரம்பித்தான். உலகின் எந்தத் துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும். உடல் பலமும், மனோபலமும் பெற்றான்.)

பிரஹலாதன் அஞ்சாமல் மார்பை நிமிர்த்தி பதில் சொன்னான். ''பரம்பொருளே! பகவானே, பிரம்மா முதல் ஒரு புல்லின் இலை வரை எல்லாவற்றையும் கட்டுப்படுத்துபவன், உலகை அளப்பவன். அவனை வணங்குங்கள். அசுர இயல்பை விட்டொழியுங்கள்'' என்றெல்லாம் தன் தந்தையை வேண்டிக் கொண்டான். ஹிரண்யகசிபு கோபத்தால் தன் வயம் இழந்து கூச்சல் போட்டான். ''ஏ துரதிருஷ்டசாலியே! நீ புகழும் பகவான் எங்கே இருக்கிறான்? அப்படி ஒருவன் உண்டா?'' பிரஹலாதன் ''பகவான் எல்லா இடத்திலும் இருக்கிறார்'' என்றான். ஹிரண்யகசிபு ''அப்படியா! இதோ இந்தத் தூண் கம்பத்தில் உன் பகவான் இருக்கிறாரா?'' பிரகலாதன் தூணைப் பார்த்து ''நான் பகவானை இந்தத் தூணிலும் பார்க்கிறேன்'' என்றான். ஹிரண்யகசிபு ''நானே இப்படைப்பின் சொந்தக்காரன், மன்னன், இப்போது உன் தலையை வெட்டி வீழ்த்தப் போகிறேன். அடங்காப்பிடாரியே! நீ பேசும் ஹரி உன்னைக் காப்பாற்றட்டும்; காப்பாற்றுகிறாரா என்று பார்க்கிறேன்'' என்று ஹிரண்யகசிபு தன் சிம்மாசனத்தில் இருந்து குதித்து எழுந்தான். வாளை உருவி தன் பலமான கையால் பிரஹலாதன் காட்டிய தூணை பலமாகத் தாக்கினான். அப்போது அந்தத் தூணில் இருந்து ஒரு பயங்கர சத்தம் மேல் வந்தது. அண்டமெல்லாம் வெடித்தது போல் அவ்வோசை இருந்தது. உலகின் இறுதி நாள் வந்து விட்டதோ என்று பிரம்மாவும் நடுங்கிப் போனார். ஹிரண்யகசிபு தன் மகனைக் கொல்ல முயற்சி செய்தான். பக்தனின் வார்த்தையை உண்மையாக்க பரந்தாமன் விரும்பினான். எல்லாவற்றையும் உள்ளுறைப் பொருளாக தானே இருப்பதைக் காட்ட விரும்பினான் விஷ்ணு பகவான். அவன் எடுத்த வடிவம் மிருகமும், மனிதரும் அல்ல. அது ஒரு நரசிங்க வடிவமாக வெளி வந்ததை ஹிரண்யகசிபு பார்த்தான். நரசிங்கத்தின் கண்கள் உருக்கிய தங்கத்தைப் போல் ஒளி வீசின. அதன் பிடரி மயிரும் தகதகவென்று ஜொலித்தது. அதன் கூரிய நகங்கள் பார்ப்போரை அச்சுறுத்தின. அதன் கூரிய நாக்கு ஒரு வாளைப்போல படபடத்தது. அதன் வளைந்த கண் புருவங்கள் அதன் முகத்தைப் பார்ப்பவரை நடுநடுங்க வைத்தன. அதன் காதுகள் குத்திட்டு உயர்ந்து நின்றன. அதன் வாயும், மூக்கும் மலைக்குகைகளைப் போல திறந்து விளங்கின. அதன் உடம்பு, விண்ணைத் தொட்டது. அதைப்பார்த்து அரக்கர் சேனைகள் நான்கு பக்கமும் சிதறி ஓடின. அதன் கையில் சுதர்சன சக்கரமும், பிற ஆயுதங்களும் ஒளி வீசின. ஹிரண்யகசிபு விஷ்ணு ஏதோ மாயாஜாலம் செய்கிறார், என்ன செய்கிறார் பார்ப்போம் என்று கையில் கதாயுதத்தைத் தூக்கிக் கொண்டு கூச்சல் இட்டுக்

கொண்டு ஓடினான். அந்த நரசிங்கத்தின் உடலில் இருந்து பாய்ந்த பேரொளி அவனைச் சூழ்ந்து கொண்டது. சுத்த சத்துவ ரூபனான நரசிம்மம் தன் கை நகங்களால் அந்த அசுரனைப் பிடித்தது. தன் தொடை மீது போட்டுக் கொண்டது. அரக்கனின் உடம்பை சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் கிழித்துப் பிளந்தது.



ஹிரண்யகசிபுக்கு பிரம்மா கொடுத்த வரத்தின் படியே அவனுக்கு சாவு வந்தது. நரசிம்மம் பிரம்மா படைத்த உயிரல்ல. அவன் மரணம் பகலிலும், இரவிலும் ஏற்படாமல் சந்தியா வேளையில் ஏற்பட்டது. அவனுக்கு சாவு மண்ணிலும் வராமல், விண்ணிலும் வராமல் நரசிம்மத்தின் தொடை மீது வந்தது. நரசிம்மம் மனிதனும் அல்ல, மிருகமும் அல்ல. ஹிரண்யகசிபு வேண்டியபடியே அவனுக்கு ஆயுதத்தால் சாவு வராமல் நரசிம்மத்தின் கை நகத்தால் சாவு வந்தது. உயிர் உள்ளவையோ, உயிரற்றவையோ என்னைக் கொல்லக்கூடாது என்று ஹிரண்யகசிபு வேண்டிக் கொண்டான். நகத்துக்கு உயிர் உண்டா? இல்லையா? என்று கூற முடியாது. ஹிரண்யகசிபுவைக் கொன்ற நரசிம்மம் தேவனும் இல்லை, அசுரனும் இல்லை, நாகப் பாம்பும் இல்லை. இப்படி பிரம்மா ஹிரண்யகசிபுக்கு கொடுத்த வரத்துக்கு உட்பட்டே அவனுடைய சாவு நிகழ்ந்தது.

நரசிம்மத்தின் கண்களில் கோபம் ஜொலித்தது. ஹிரண்யகசிபுவின் செத்த உடலை தூக்கி எறிந்துவிட்டு நரசிம்மம் அருகில் இருந்த அரக்கர்களையெல்லாம் கொன்றபடியே தாண்டவமாடிற்று. தேவர்களும், பிரம்மா, இந்திரனும், சிவனும், முனிவர்களும் அதிலிருந்து சற்று தள்ளியே நின்றார்கள். பிறகு பிரம்மாவும் சிவனும் இந்திரனும் ரிஷிகளும், பித்ரு தேவதைகளும் நரசிம்மத்தைத் துதி பாடினர். சித்தர்களும், வித்யாதரர்களும், நாகர்களும், மனுக்களும், பிரஜாபதியும் நரசிம்மத்தைப் போற்றிப் புகழ்ந்தனர். கந்தர்வர்களும், சாரணர்களும், யக்ஷர்களும், கிம்புருஷர்களும் நரசிம்மத்தை துதித்துக் குதித்துப் பாடினர். வைதாளிகர்களும், கின்னரர்களும், விஷ்ணு தூதர்களும் நரசிம்மப் பெருமாளை வாயாரப் பாடித் துதித்தனர். ஆனால்

பிரஹலாதன் மட்டுமே அஞ்சாமல் அதன் அருகில் போனான். பல வகையான தோத்திரங்களைப் பாடினான். பக்தர்களைக் காக்கும் பரந்தாமன் எப்படி உலகில் சுற்றி வந்து பிறக்கிறான், அவன் மாயை எவ்வளவு வலுவானது என்பதை விளக்கினான். உலக இன்பங்கள் அற்பமானவை. பகவான் கற்பக மரம்போல் வாரி வழங்கும் கருணைக் கடவுள் அவன் அனைத்தின் உள்ளும், புறமும் உறைந்து இருக்கிறான். இப்படைப்பு முழுவதும் பகவானிடம் இருந்தே வெளிவந்தது. பகவானே ஹயக்ரீவன் ஆகவும், வேதத்தைக் காப்பவன் ஆகவும் அவதரித்தான். மனிதனாக, மிருகமாக, மீனாக, ரிஷியாக, விண்ணவராக அவதரித்தவர் பகவானே என்று அவனிடத்தில் மாறாத பக்தியை வேண்டினான் பிரஹலாதன். பகவான் கொடுத்த எந்த வரத்தையும் பிரஹலாதன் ஏற்றுக் கொள்வே இல்லை. மாறாத பக்தி ஒன்றையே வேண்டினான்.

உலகத்தில் இறைவனை நாடும் பக்தர்கள் எல்லோருக்கும் பிரஹலாதனின் கதை ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. பகவான் அவனை அந்நாட்டின் சிங்காதனத்தில் ஏற்றி உட்கார வைத்தான். ''தூயவனே, கோபமற்றவனே, நீ பிறந்ததால் உன் குலத்தின் 21 தலைமுறை மூதாதையர்கள் புண்ணியம் எய்தினர். உன் கதையைக் கேட்பவர்கள் அதுபோல தூயவர்கள் ஆவார்கள்'' என்று விஷ்ணு பகவான் ஆசி கூறினான். எவ்வளவோ துன்பங்கள் வந்தாலும் அசைந்து கொடுக்காத பிரஹலாதனின் கதை நம் வாழ்விலும் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தியை கொடுக்குமாக! மாறாத பக்தியை அருளுமாக!

இக்கதையைக் கேட்ட, விஜயன், விமலா, விகடன், வினயா எல்லோரும் மகிழ்ச்சி ஆராவாரம் செய்தனர். நான் கேட்ட யானைக் கதை வந்து விட்டது என்றான் விஜயன். விமலா நான் கேட்ட பூனைக் கதை வந்து விட்டது என்றாள். விகடன் நான் கேட்ட பானைக்கதை வந்துவிட்டது என்றான். வினயா நான் கேட்ட சேனைக்கதை வந்துவிட்டது என்றாள். குழந்தைகள் நால்வரும் நாங்கள் பகவானிடம் பிரஹலாதனைப் போல் பக்தி பண்ணுவோம். எவ்வளவு துன்பம் வாழ்க்கையில் வந்தாலும் பொறுத்துக் கொள்வோம். பகவானின் நாமத்தை 'ஓம் நமோ நாராயணா, ஹரி, வாஸுதேவா' என்று பாடுவோம் என்றனர். பாட்டி பொன்னம்மாள் குழந்தைகளை ஆசீர்வதித்தாள்.

**கேந்திரச் செய்தி**

கன்னியாகுமரி மாவட்டம் மங்காவிளையில் விவேகானந்த விழா குடியரசு தின விழா, நேதாஜி மன்ற ஆண்டு விழா ஆகியவை நடைபெற்றன. ஆர். அறிவழகன் கொடியேற்ற சிறப்பு ஊர்வலமும் விளையாட்டுப் போட்டி, குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள், திரு. அருமைத்தங்கம் சிறப்புரை ஆகியவை முக்கியமான நிகழ்ச்சிகள் ஆகும். தருமபுரம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. ஏ. கணேசன் பரிசு வழங்கினார். 400 பேர் பங்கேற்றனர். விழா ஏற்பாடு எஸ் ஸ்ரீதேவி, ற்றி. சுபத்திரா.

வளம்குன்றா வளர்ச்சி

# பாரத நாட்டில் தரையடித் தண்ணீர் நிர்வாகம்

துஷார்ஷா

பாரத நாட்டில் தரையடித் தண்ணீரைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் செய்யும் வழக்கம் நீண்ட நாட்களாக இருந்து வரும் மரபு ஆகும். ஆனால் அண்மைக்காலத்தில் தான் தரையடித் தண்ணீரை நிர்வாகம் செய்வது பெரிய பிரச்சினையாகி விட்டது. இப்பிரச்சினை ஏன் உருவாயிற்று என்று அறிந்து கொள்வதற்கு நாம் பொருளாதாரத்திற்கும், புறச்சூழலுக்கும் உள்ள உறவுகளைப் புரிந்து கொள்ளவேண்டும்.

வழக்கமாக விவசாயிகள் கிணற்று நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். மரபு சார்ந்த பண்ணைகளில் மாடுகளைப் பயன்படுத்தியோ மனித உழைப்பினாலோ ஏற்றம் போட்டோ கிணற்றுத் தண்ணீர் இறைக்கப்பட்டது. வயலுக்கு பாய்ந்தது. அதுவரை தரையடித் தண்ணீரைப் பயன்படுத்துவதில் பாதுகாப்பு என்ற எல்லைக்கோட்டை விவசாயி தாண்டவில்லை. பசுமைப்புரட்சி வந்தது. தொழில் நுணுக்கம் மாறியது. தண்ணீரைப் பயன்படுத்துவது அடிப்படையில் மாறிப் போயிற்று. தண்ணீர் இறைக்கும் தொழில் நுணுக்கம் தலைகீழாக மாறிப் போயிற்று.

டீசல் இயந்திரங்கள் மின்சார மோட்டார்கள் இவற்றைப் பயன்படுத்தி தண்ணீர் இறைக்கும் வழி திறந்தது. ஒரு நிமிடத்தில் விவசாயி இறைக்கக்கூடிய தண்ணீரின் அளவு பல மடங்கு ஆயிற்று. ஒரு ஏக்கர் நிலத்தில் அதிகத் தண்ணீரைப் பயன்படுத்துவது விவசாயிக்கு லாபம் கொடுத்தது. தரையடித் தண்ணீரைப் பயன்படுத்தும் பசுமைப்புரட்சி வளர்ந்தது.

தரைக்குச் சற்று கீழே மிக அதிகமாக தண்ணீர் இருக்கும் பகுதிகளும் தண்ணீர்ப் பஞ்சம் உள்ள பகுதிகளும் சிறப்பான கவனத்திற்குரியவை. தரையடித் தண்ணீர் அளவுக்கு அதிகமாக இருக்கும் பகுதியில் அத்தண்ணீரை இறைப்பது சமுதாயத்திற்கும், புறச்சூழலுக்கும் தொண்டு செய்வது ஆகும். உதாரணமாக நெய்வேலியில் தரையடித் தண்ணீரை இறைத்த பிறகு தான் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுக்க முடியும். ஆனால் இதற்கு நேர் மாறாக வடக்கு குஜராத், கோயம்புத்தூர் பகுதிகளில் அளவுக்கு மீறி தண்ணீரை இறைக்கும் ஆபத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இதற்குச் சமுதாயம் பெரிய விலையைக் கொடுக்க வேண்டி இருக்கும்.

1951-ல் தண்ணீர் இறைக்கும் தொழில் நுணுக்கம் புதிதாக இருந்தது. நாட்டில் ஐந்தாயிரம் ஆழ்துளைக் கிணறுகள் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டன. ஒரு லட்சத்திற்கும் குறைவான டீசல் இந்திரங்களும், மின்சார மோட்டார்களும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் 1997-லோ பொதுமக்கள் பயன்படுத்தும் ஆழ்துளைக் கிணறுகள் அறுபத்தேழாயிரம் ஆகிவிட்டன. ஒருகோடியே முப்பத்தைந்து லட்சம் டீசல் மோட்டார்களும், மின்மோட்டார்களும் தண்ணீரை வாரி இறைக்கின்றன. வருடத்திற்கு பத்து லட்சம் புதிய மோட்டார்கள் தண்ணீர் இறைக்கும் பணிக்கு வந்து சேர்கின்றன.

பாரத நாட்டு விவசாயத்தில் நீர்ப்பாசனம் மிக முக்கியத்துவம் பெறுவதும் தரையடித் தண்ணீரை நெருக்கடிக்கு உள்ளாக்கும் பெரிய காரணமாகும். விவசாயிகள் பல்வேறு நீர்ப்பாசன வழிமுறைகளைப் பற்றி அறிந்து வைத்து இருக்கிறார்கள். நீர்ப்பாசனம் என்பது விவசாயிக்கு தரப்படும் ஒரு சேவை வசதி என்று கருதுகிறார்கள். இதில் மற்ற நீர்ப்பாசன வசதிகளை விட தரையடித் தண்ணீரை இறைப்பது அதிகச் சுலபமாகக் கருதப்படுகிறது.



**பாரத நாட்டில் தரையடி நீரை உறிஞ்சும் வழக்கம் தொன்மையானது.**

நீர்ப்பாசனத்திற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள், பொது ஆழ்துளைக் கிணறுகள், தனியாரின் ஆழ்துளைக் கிணற்றில் இருந்து பணம் கொடுத்து, தண்ணீர் வாங்குதல் இப்படிப் பல வகைகள் உண்டு. இவற்றுள் விவசாயிக்கு லாபம் தருபவை என்று ஆழ்துளைக் கிணறுகள் கருதப்படுகின்றன. மழை நீரால் விவசாயம் செய்வதைக் காட்டிலும் ஆழ்துளைக் கிணற்று நீரால் விவசாயம் செய்வது அதிகம் செலவு பிடிக்கும் வழி தான். ஆனால் விளைச்சலும், லாபமும் அதேபோல் அதிகமாகின்றன. விலை கொடுத்துத் தண்ணீர் வாங்குவதில் செலவு மிக அதிகம். சொந்த ஆழ்துளைக் கிணறு கொஞ்சம் மலிவானது. தனியார்

விற்கும் தண்ணீர் திறமையுடன் கொண்டு வந்து விவசாயிக்குக் கொடுக்கப்படுகிறது.

**ஒரு மணியில் இவ்வளவு தண்ணீர் இறைக்கலாம் என்ற அளவு பல மடங்கு அதிகமாகி விட்டது.**



நாட்டில் தண்ணீர்ச் சந்தைகள் உருவாகி விட்டன. தண்ணீரை விலை பேசி விற்கும் வழக்கம் பரவி வருகிறது. ஆழ்துளைக் கிணற்றின் உரிமையாளர்கள் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வைத்திருப்பவர்கள், தண்ணீர் வாங்குபவர்கள் எல்லோருக்குமே இந்தச் சந்தை முக்கியமானது. குஜராத் போன்ற மாநிலங்களில் இறைக்கப்படும் தண்ணீரில் பாதி விலைபேசி விற்கப்படுகிறது. வாங்குபவர்கள் விவசாயிகள் தாம். கேடா என்ற குஜராத் மாவட்டத்தில் 90 சதவிகிதம் தண்ணீர் இறைக்கப்பட்டு விற்கப்படுகிறது. இதனால் உரிமையாளர் ஆழ்துளைக் கிணற்றை அதிகம் பயன்படுத்துகிறார். இறைக்கும் செலவும் குறைகிறது. தண்ணீர் விற்பனை விலையும் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது.

தண்ணீர்ச் சந்தையால் கிணறுகள் இயந்திரங்கள் இவற்றில் பண முதலீடு செய்வது அதிகரிக்கிறது. ஏழைகள் தண்ணீர் வாங்குவதும் அதிகரிக்கிறது. அவர்களால் கிணறோ, இயந்திரமோ வாங்க முடியாவிட்டாலும் தண்ணீரை விலை கொடுத்து வாங்க முடியும். இத்தகைய சந்தைகளால் சிறுசிறு துண்டு நிலங்களும் தண்ணீர் வசதி பெறுகின்றன. கூலிகளுக்கு வேலை கிடைக்கிறது. வேலையும் வருடம் முழுவதும் பரவலாகக் கிடைக்கிறது.

குஜராத்தில் குழாய்களைப் பதிப்பதும் அதிகமாகி தண்ணீர் வீணாகாமல் சேமிக்கப்படுகிறது. ஆனால் இவற்றில் முதலீடு செய்யப்படும் பணமும் மிகவும் அதிகமாகவே இருக்கிறது. இவற்றின் மொத்த விளைவு தரையடித் தண்ணீர் இறைக்கப்படும் அளவு அதிகமாகிக் கொண்டே போகிறது. தண்ணீர்ச் சந்தை வந்திராவிட்டால் தண்ணீர் இறைப்பதும் குறைவாகவே இருந்திருக்கும். தண்ணீர் வசதி மிக அதிகமாக இருக்கும் பகுதிகளிலும், தண்ணீர் வசதி மிகக்குறைவாகவே இருக்கும் பகுதிகளிலும் இந்தத் தண்ணீர் வியாபாரம் அதிகம் எடுபடவில்லை.

இதனால் ஆழ்துளைக் கிணறுகள் வேண்டுபவர்களுக்குத் தான் தண்ணீர் இறைத்துக் கொடுக்கின்றன. தண்ணீர் கொடுக்கும் அளவு, நேரம் இவையும் உரிமையாளரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. எல்லாம் சேர்ந்து மற்ற நீர்ப்பாசன வசதிகளை விட இறவைத் தண்ணீர் விவசாயிகளிடையே அதிகம் பரவிவிட்டது. மற்ற வசதிகள் இருக்கும் இடங்களிலும் விவசாயிகள் தரையடித் தண்ணீரை இறைப்பதையே விரும்புகிறார்கள்.

தேசீய அளவில் மத்திய தரையடித் தண்ணீர் வாரியமும் விவசாய கிராம வளர்ச்சிக்கான தேசீய வங்கியும் தரையடித் தண்ணீர் எப்படி உறிஞ்சப்படுகிறது என்பதைக் கண்காணித்துக் கொண்டே இருக்கின்றன. 1975-ல் நம் நாட்டில் ஒரு

கோடியே 70 லட்சம் ஹெக்டேர் மீட்டர் தரையடித் தண்ணீர் கிடைத்தது. தரையடித் தண்ணீரைப் பற்றிய அறிவும் அவற்றை அளவிடும் அறிவும் வளர்ந்தன. பிறகு இந்த அளவு மூன்று கோடி ஹெக்டேர் மீட்டராகக் கருதப்பட்டது. மத்திய தரையடித் தண்ணீர் வாரியம் நம் நாட்டில் நாலரை கோடி ஹெக்டேர் மீட்டர் தரையடித் தண்ணீர் உள்ளதாகக் கணக்குப் போட்டிருக்கிறது.

குஜராத், மஹாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் விவசாயிகள் திறமையுடன் தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள். இந்த அளவு தண்ணீரால் ஏழரை கோடி ஹெக்டேர் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்ச முடியும்.

இந்த அளவு மிகப் பெரியது. ஆனால் நாம் தரையடித் தண்ணீரை உறிஞ்சும் வேகம் ஆபத்தானது. ஐந்து, ஆறு வருடங்களில் பாதுகாப்பு எல்லையை நாம் தாண்டி விடுவோம். நாடு முழுவதிலும் தரையடித் தண்ணீர் அளவுக்கு மீறி உறிஞ்சப்படும் நிலைக்கு வந்து விடுவோம். ஆகவே தற்போது குஜராத்தின் சில மாவட்டங்கள், தமிழகத்தின் கோயம்புத்தூர் ஆகியவற்றில் மட்டும் காணப்படும் இப்பிரச்சினை விரைவில் தேசம் முழுவதும் பரவி விடும்.

## கண்ணனில் கரைந்த கண்ணன்

விவேகானந்த கேந்திர கிராம முன்னேற்றத் திட்டம், இயற்கை வள அபிவிருத்தித் திட்டம் மற்றும் தமிழகத்தின் பல தொண்டு நிறுவனங்களில் பணிபுரிந்த சகோதரர் கண்ணன் 07.03.2012 அன்று காந்தி கிராமம் மருத்துவமனையில் கிருஷ்ண பரமாத்மாவுடன் ஒன்றறக் கலந்தார். அவருக்கு மூளையில் அறுவைச் சிகிச்சை நடந்து நீண்டகாலம் நோய்க்குப் பிந்தைய மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார். ஆனால் உடல் தேறாமல் அவர் போற்றிய கண்ணனோடு ஒன்றறக் கலந்தார். அவருடைய மனைவி காந்தி கிராம சௌபாக்கிய இல்லத்தில் வளர்ந்தவர் ஆவார். அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இறைவனடி சேர்ந்து விட்டார். திரு. கண்ணனுடைய குழந்தைகள் நண்பர்களால் நல்லமுறையில் வளர்க்கப்பட்டு கல்வி பெற்று வருகின்றார்கள். சுய உதவிக் குழுக்கள், நீர்வள மேம்பாடு, குழந்தைகள் முகாம்கள் ஆகியவற்றில் கண்ணன் ஆற்றிய அன்புப் பணிக்காக பொதுமக்கள் அவரை எப்போதும் நினைவில் வைத்திருப்பார்கள். கண்ணன் நோயுற்றிருந்தபோது அன்பர்களும், தொண்டர்களும் அவரைச் சூழ்ந்து கொண்டு மருத்துவ சிகிச்சை, நடைமுறை உதவி என்று பலவிதங்களிலும் அவருடைய கடைசிக்கால துன்பங்களைக் குறைக்க முயன்றது நெஞ்சைத் தொடும் சம்பவம் ஆகும். மனிதகுலத்தின் நல்லுணர்வுகள் மீது நம் நம்பிக்கையை வளர்க்கும் சம்பவம் ஆகும். ராமநாதபுரம் மாவட்டம் செல்வநாயகபுரம் ஊர்க்குளத்தை ஆழப்படுத்தும் பணியில் கண்ணன் ஈடுபட்டிருந்த போது அவ்வூர் மக்களின் அன்புக்குப் பாத்திரமாகி அவர்களும் கண்ணனை, தங்களில் ஒருவராகவே நினைத்துப் போற்றினர். வாழ்வில் மட்டுமல்லாமல் வாழ்வின் முடிவிலும் மக்களை ஒன்று திரட்டுவதாகவே கண்ணனின் கதை இருந்தது. இறைவன் அவருக்குத் தன் திருவடியில் நல்லதொரு இடத்தைக் கொடுத்திருப்பார் என்பதில் ஐயம் இல்லை.

# சோஷலிச நாடுகளும், குடும்பமும் என்ற அமைப்பும்

பிரான்சிஸ் ஃபுகுயாமா

**1) சோஷலிச நாடுகளும் குடும்பம், குலம் முதலிய இயற்கையான அமைப்புக்களும்:** சோவியத் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பா ஆகிய நாடுகளில் பின்பற்றப்பட்ட சோஷலிசம், அரசு அல்லாத, இராணுவம் அல்லாத சமுதாயத்தை விரைவில் அழித்துப் போட்டது. இதனால் அங்கு சந்தைப் பொருளாதாரமும் மக்கள் ஆட்சியும் வளர்வது தடைபட்டன. லெனினின் அரசு தன் அதிகாரத்திற்குப் போட்டியாக முளைத்த எல்லா அதிகாரங்களையும் உடைத்தெறிய முற்பட்டது. பெரிய பொருளாதாரம், சிறிய பண்ணைகள், சின்ன வியாபாரங்கள், தொழிற்சங்கங்கள், மத நிறுவனங்கள், செய்தித்தாள்கள், தொண்டு நிறுவனங்கள், குடும்பம் இவை அனைத்தும் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. அரசுக்கும், மக்களுக்கும் இடையில் இருக்க வேண்டிய இடைநிலை நிறுவனங்கள் காணாமல் போய்விட்டன. இவை பலம் இழந்தன. ஒற்றுமை இழந்தன. நிலைப்புத் தன்மையை இழந்தன. சோவியத் அரசு மிகுந்த பலம் கொண்டது. அதில் உடைந்து தனித்துப் போன தனி மனிதர்கள் இருந்தனர். சிலச்சில குடும்பங்கள் இருந்தன. ஆனால் இடைநிலை நிறுவனங்கள் காணாமல் போய்விட்டன. இக்கொள்கை மனிதனின் சுயநலத்தை அழிப்பதற்காக உருவாயிற்று. இதனுடைய வேடிக்கையான விளைவு என்ன தெரியுமா? மக்கள் இன்னும் சுயநலவாதிகளாகப் போய் விட்டார்கள்.

**2) காணாமல் போன இடைநிலை நிறுவனங்கள்:** இப்படி இடைநிலை நிறுவனங்கள் காணாமல் போனது, பலவீனமடைந்தது, சோஷலிச நாடுகளில் மட்டும் இல்லை. தென்அமெரிக்க, கத்தோலிக்க நாடுகளிலும் கதி இதுவேதான். பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளிலும் குடும்பத்திற்கும், அரசுக்கும் இடைப்பட்ட நிறுவனங்கள் பலவீனம் அடைந்தன. ஆனால் இந்நாடுகளில் குடும்பத்திற்கு மரியாதை பாக்கி இருந்தது.

பிரெஞ்சு புரட்சியில் பத்துபேர் கூட ஒன்றிணைந்து வேலை செய்து அரசாங்கத்தின் உதவி இன்றி தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. ஸ்பெயின் நாட்டிலும் குடும்பம் நம்பப்படுகிறது. மரியாதை செய்யப்படுகிறது. சமுதாயம் என்ற ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ்டு சீனநாட்டில், சீன சமுதாயத்தின் மீது குடும்பத்தின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. 1949-ல் கம்யூனிஸ்டுகள் பதவிக்கு வந்தனர். குடும்ப அமைப்பின் ஆதிக்கத்தை உடைத்தெறிய உறுதி பூண்டனர்; பொருளாதாரத்தை நிறைவுபடுத்துவதில்

சீனமரபின் தந்தைவழிச் சமுதாயக் குடும்பம் ஒரு ஆபத்தாகக் கருதப்பட்டது. இடைஞ்சலாகக் கருதப்பட்டது. தேசம் என்ற கருத்து, கம்யூனிஸ்டு கொள்கை இவற்றால் நாடு முழுவதும் ஒற்றுமைப்படுத்தப்பட வேண்டும் என்று கம்யூனிஸ்டு கட்சி விரும்பியது. இதற்குக் குடும்பம் இடைஞ்சல் செய்தது. பலவீனப்படுத்திற்று. பாரம்பரியக் குடும்பத்தை அழிப்பதற்கு கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டு பல வேலைகளைச் செய்தார்கள். நவீன குடும்பச் சட்டம் என்ற ஒன்றை உருவாக்கினார்கள். பலதாரத் திருமணம் சட்ட விரோதம் ஆயிற்று. பெண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டன. விவசாயக் குடும்பம் உடைத்து கிழிக்கப்பட்டது. கூட்டு விவசாயம் அதன் இடத்தைப் பிடித்துக் கொண்டது. குடும்ப வியாபாரங்கள் தேசீயமயமாக்கப்பட்டன. அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டன. குழந்தைகளுக்கு மூளை சலவை செய்யப்பட்டு அதிகாரத்தின் உண்மையான அடிப்படை கட்சி தான் குடும்பம் அல்ல என்ற கருத்து அவர்கள் தலைக்குள் புகுத்தப்பட்டது. கன்பூசிய மரபு பல ஆயிரம் ஆண்டுகளாக நாட்டில் பழகி வந்தது. பல ஆண் குழந்தைகளை ஒருவர் பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற அந்த மரபு சொல்லுகிறது. அதன் முகத்தில் அடித்தாற்போல் குடும்பக் கட்டுப்பாடு ஒரு குழந்தை போதும் என்ற இலட்சியத்துடன் புகுத்தப்பட்டது.

ஆனால் கன்பூசியப் பண்பாட்டின் நிலைப்புத் தன்மையை கம்யூனிஸ்டுகள் மிகவும் குறைத்து எடைபோட்டு விட்டார்கள். சீனக்குடும்பம் கடந்த ஐம்பது ஆண்டு அரசியல் கொந்தளிப்பில் இருந்து இன்னும் பலம் பெற்று வெளி வந்து இருக்கிறது.

கன்பூசியச் சமுதாயம் மரபு சார்ந்தது. பல கிடைமட்டங்களைக் கொண்டது. இதில் வியாபாரிகளுக்கு அதிக மரியாதை கிடையாது.

கன்பூசிய நீதிநெறி ஒழுக்கத்தின் மையச் சிந்தனை குடும்பத்தை தெய்வ சக்தியாக மதித்தது. அதன் முன்னால் மற்ற உறவுகள் எல்லாம் தலை வணங்கித்தான் ஆகவேண்டும். குடும்பக் கடமை மற்ற எல்லாக் கடமைகளுக்கும் முன்னால் வரும். சக்கரவர்த்திக்கும், விண்ணரசுக்கும் இவ்வுலகிலும், மறுவுலகிலும் இருக்கும் இந்த அதிகாரத்தையும் விட குடும்பக் கடமை அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.

கன்பூசியஸ் ஐந்து உறவுகளை மிக முக்கியமானவை என்று கூறுகிறார். இவற்றுள் தந்தைக்கும், மகனுக்கும் இடையில் உள்ள உறவு தான் சாவி போன்றது. தந்தையின்பால் பக்தி என்ற ஒழுக்கக் கட்டுப்பாட்டை அது மதிக்கிறது. பெற்றோரின் கட்டளைக்குக் குழந்தைகள் கீழ்ப்படிய வேண்டும். குழந்தைகள் வயது வந்த பிறகும் பெற்றோர்களை மதித்து அவர்கள் பேச்சைக் கேட்கவேண்டும். வயதான பெற்றோர்களை மக்கள் பணம் கொடுத்து ஆதரிக்க வேண்டும். இறந்த பெற்றோர்களின் ஆவியை வணங்கவேண்டும். குடும்ப வரிசையை உயிரோடு வைத்து பல தலைமுறைக்கு முந்தைய மூதாதையர்களையும் போற்ற வேண்டும். இத்தகைய குடும்ப அரசை கம்யூனிஸ்டு அரசு ஒழித்துக் கட்ட முயற்சி செய்தது.

நவீன சீன நாடு சீன சமுதாயத்தில் கருக்குடும்பத்திற்கு முக்கியத்துவம் அதிகம். அதிலிருந்து தொலைவில் செல்லச்செல்ல தீவிரத் தன்மை குறையும். சீன கிராமத்தில் ஒற்றுமை குறைவு. பாரத நாட்டிலும் ஜப்பானிலும், ஐரோப்பாவிலும், சில பகுதிகளிலும் கிராம ஒற்றுமை அதைவிட அதிகம். கிராம மக்கள் ஒன்று சேர்ந்து பொதுப்பணி செய்வது பொது வழக்கங்களை உண்டாக்குவது ஒற்றுமை உணர்வை உண்டாக்குவது இவை குறைவு. சீன கிராம சமுதாயம் துடிப்பாக செயல்படாத ஒரு சமுதாயம் ஆகும். கம்யூனிஸ்டு அரசு குடும்பத்தை பலவீனப்படுத்தி அரசாங்கத்திடம் தனி மனிதன் அதிகம் பற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திற்று. இரண்டு தடவை புரட்சிகள் நடந்தன. கூட்டுப் பண்ணைகள் உருவாகின. பண்பாட்டு புரட்சியில் இரத்த ஆறு ஓடிற்று. மாவோ இறந்தவுடன் கூட்டுப் பண்ணைகள் கலைக்கப்பட்டன. இவற்றால் எல்லாம் மகிழ்ச்சியுற்ற மக்கள் குடும்பம் தரும் பாதுகாப்புப் புகலிடத்திற்குள் ஓடிப்போய் புகுந்து கொண்டனர். டெங் ஸியாவோ பிங் அதிகாரத்தைப் பிடித்தார். பொருளாதாரத்தைச் சந்தைமயமாக்கினார். பழைய சீன சமுதாய உறவுகள் மறுவாழ்வு பெற்றன. பொருளாதார மாற்றம் குடும்பம் புத்துயிர் பெறுவதில் சென்று முடிந்தது. கட்சி அதிகாரிகள் எந்தக் கொள்கையினர் ஆனாலும் தங்கள் குழந்தைகளை மேற்கு நாடுகளுக்குக் கல்வி கற்க அனுப்பினார்கள். அவர்கள் திரும்பி வந்து தங்கள் முதுமைப் பருவத்தில் தங்களைக் காப்பாற்றுவார்கள் என்று நம்பினார்கள். கட்சி அதிகாரி தன் கைகளால் உருவாக்கிய கட்சி அமைப்பை விட காலம் காலமாக பரவி வரும், கன்பூஷிய குடும்ப சமூக அமைப்பையே அதிகம் நம்பினார்.

(ஆதாரம் டிரஸ்ட் என்ற நூல் – 1995)

## கேந்திரச் செய்திகள்

குமரி மாவட்டம் திக்குறிச்சி பாலர் பள்ளியில் திருமதி ரேணுகாவும், பேபி ஷாலினியும் சுவாமி விவேகானந்த விழாவை நல்லமுறையில் நடத்தினார்கள். திரு. ராமச்சந்திரன், திருமதி கிருஷ்ணம்மாள், திரு. ரகு ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். குழந்தைகளின் பல்சுவை நிகழ்ச்சிகள் விழாவுக்கு பெருமை சேர்த்தன.

வடக்குப் பேயன்குழியில் ப. சாரதாவும், எம். சுமதியும் விவேகானந்தர் விழாவையும், பங்குனி உத்திர திருவிழாவையும் இனிமை பொங்க நடத்தினர். ஊர்த் தலைவர்கள் உள்பட ஆயிரம் பேர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். காலை 7 மணிக்கு ஆரம்பித்த விழா இரவு 11 வரை தொடர்ந்து நடந்தது. கரகாட்டம், நாடகம், நடனம், சொற்பொழிவு, பரிசு இப்படி பல விதத்திலும் விழா நெஞ்சைத் தொட்டது.

# குடும்பம் உடைந்து நொறுங்குவதால் ஏற்பட்டதும் தீய விளைவுகள்

1) பெற்றோரின் அன்பு குழந்தைகளுக்குக் கிடைக்காமல் போய் அவர்கள் மனோ தத்துவ ரீதியில் பாதிக்கப்படுகிறார்கள். இளம் குற்றவாளிகள் உருவாகுகின்றார்கள். நடத்தைக் கோளாறுகள் ஏற்படுகின்றன.

2) கணவன் இறந்தால் குடும்பத்தின் நிதி நிலைமை சீர்கெடுகிறது. பெண்களின் தூக்கக் குறைவு, காரணமற்ற அழுகை, குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கின்றன.

3) குடும்பம் கிராமத்தில் இருந்து நகரத்திற்குப் போகும் போது பொருளாதாரச் சீர்கேடு உண்டாகிறது.

4) குடும்பம் நாடு விட்டு நாடு போகும் போது பண வசதி அதிகரிக்கிறது.

5) உள்நாட்டுக்குள் இடம் பெயரும் போது கூட்டுக் குடும்ப ஏற்பாடுகளுக்கு வாய்ப்பு அதிகம்.

6) பொதுவாக இடப்பெயர்ச்சியினால் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. பணத்திற்காகப் பிறரைச் சார்ந்து இருப்போர், எண்ணிக்கை அதிகமாகிறது. பெண்கள் குடும்பத்தில் தலைமை ஏற்கிறார்கள். குடும்பம் சுருங்குவதும், விரிவாவதும் மாறி மாறி நடக்கிறது. குழந்தைகள் பிறக்கும் விகிதம் குறைகிறது.

7) ஆண்கள் ஊர் விட்டு ஊர் போகும்போது பெண்கள் தனிமைப்படுகிறார்கள். குற்ற உணர்வு பெருகுகிறது. பெண்கள் அதிகம் சுரண்டப்படுகிறார்கள். கணவன் மனைவி பிரிகிறார்கள். திருமண உறவு பலவீனமாகிறது. மனத்திலும் உணர்ச்சியினாலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கவலை, மன இறுக்கம், மனக்கொந்தளிப்பு, மன நோய் இவை அதிகரிக்கின்றன. பெண்களின் பணச்சுமை அதிகரிக்கிறது. அவர்கள் உலகத்தை தன்னந்தனியாக எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது.

8) விவாகரத்து, தற்கொலை முயற்சிகள், நரம்புத்தளர்ச்சி, சுயமதிப்பு குறைதல், போர்க்குணம், அமைதியின்மை, எரிச்சல் ஆகியவை குடும்ப உறுப்பினர்களிடையே உண்டாகின்றன.

9) ஆண் வெளிநாடு செல்லும்போது மனைவி, மாமனார், மாமியாருடன் ஒத்துப் போவதில் கஷ்டம் உண்டாகிறது. பல பெண்கள் மனநோய்க்கு உள்ளாகி முற்றிலும் உடைந்து, நொறுங்கிப் போய் விடுகிறார்கள். இவ்வாறு குடும்பங்கள் உடைந்து விடும்போது குடும்ப உறுப்பினர்கள் பலப்பல பாதிப்புக்களுக்கு உள்ளாகிறார்கள்.

# மலரும் கேந்திரம்

## மா. ஏக்நாத்ஜியின் கடிதங்கள்

**21/10/1963**
**புது டில்லி**


SHRI EKNATHJIRANADE
1914-1982

அன்புள்ள ஸ்ரீ பன்னா அவர்களுக்கு,

உங்கள் கடிதம் 14.10.1963 என்று தேதியிடப்பட்டிருந்தது. ஆனால் 16.10.1963 அன்று தபால் பெட்டியில் போடப்பட்டது. அது 17.10.1963 அன்று இங்கு வந்து சேர்ந்தது. நான் 15-ம் தேதியும், 16-ம் தேதியும் உங்கள் கடிதத்திற்காக வீணாகக் காத்து இருந்தேன்.

எனக்கு சென்னைக் கடிதம் 11-ம் தேதி காலையிலேயே கிடைத்து விட்டது. உங்களுக்கு அன்று மாலை வரை அக்கடிதம் கிடைக்காமல் போனது துரதிருஷ்டமே. அக்கடிதம் ஒருக்கால் கடிதப் பெட்டியில் உங்களுக்காக காத்திருந்து இருக்கலாம். தபால்காரர் கொண்டு வந்து கொடுப்பதில் தாமதமா அல்லது வீட்டில் அதைப் பார்த்ததில் தாமதமா என்று உங்கள் கடிதம் குறிப்பிடவில்லை.

நான் இங்கிருந்து யார் யாருக்கெல்லாம் கடிதம் எழுதி உள்ளேனோ அவர்களுடனாவது நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும் என்பது உங்களிடம் எதிர்பார்க்கப்பட்டது. மரியாதைக்குரிய சபாநாயகர் ஸ்ரீ கே.எஸ். வஸுவிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. என்னுடைய 12-ம் தேதி கடிதம் அவருக்கு 14-ம் தேதி பிற்பகலில் தான் கிடைத்ததாம். நான் சொன்ன விஷயத்தை எடுத்துச் செயல்பட அவரால் முடியாமல் போயிற்று என்று அவர் எனக்குத் தகவல் கொடுத்துள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில் கல்கத்தா அலுவலகத்தின் எந்த உறுப்பினரும் இந்த விஷயம் பற்றி என்னுடன் தொடர்புகொள்ளவில்லை என்றும் கூறி உள்ளார். நீங்கள் ஸ்ரீ அசோகா சர்க்கார், ஸ்ரீ சுனீதி பாபு, நீதி அரசர் முக்கர்ஜி ஆகியோருடன் தொடர்புகொள்ள உங்களால் முடிந்ததா என்று எனக்குத் தெரியவில்லை. உங்கள் கடிதத்தில் கூறிய காரணங்களின்படி திரு. பக்தவத்சலத்துடன் ஒரு பிரதிநிதி கூட்ட முறையிலான சந்திப்பு நடை முறையில் சாத்தியம் இல்லாவிட்டாலும் இந்தச் சந்தர்ப்பமும், என் கடிதங்களும் இந்த நான்கு கனவான்களைச் சென்று சந்திக்க உங்களுக்கு ஒரு வாய்ப்பு அளித்தனவே. ஒரு ஸ்தாபன அமைப்பாளர் சமுதாயத் தொண்டர் என்ற

முறையில் நீங்கள் எப்போதும் ஒரு தத்துவத்தை நினைவில் வைத்திருக்க வேண்டும். ''வாய்ப்புக்கள் என்பவை கட்டாயக் கடமைகளே''

நான் பம்பாய் புறப்படும் நாளுக்கு முந்தைய மாலையில் இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். நாளை காலை பஞ்சாப், பம்பாய் ரயில் மூலம் நான் டெல்லியில் இருந்து புறப்படுகிறேன். அங்கு ஒரு வாரம் தங்கிவிட்டு கல்கத்தா புறப்பட எண்ணியுள்ளேன். பம்பாயில் என் பணிகளைப் பொறுத்து அடுத்த பயணம் அமையும். நவம்பர் மத்தியில் எனக்கு மறுபடியும் டெல்லிக்கு வர வேண்டியது இருக்கும்.

நீதி அரசர் முக்கர்ஜியின் துணைவியார் நாக்பூர் சென்றது நம்முடைய விஜயதசமி கொண்டாட்டங்களில் அவ்வூரில் அவர் பங்கேற்றது பற்றி அவருடைய மனப்பதிவுகளை நீங்கள் எனக்கு எழுதித் தெரிவிக்கவில்லை. டாக்டர் சுஜித் தர் பற்றியும் நீங்கள் எழுதவில்லை. ஸ்ரீ தேவ ஜோதி பர்மன் தன்னுடைய நாகபுரி பயணத்தில் இருந்து அதிக பலத்தெம்புடனும், உற்சாகத்துடனும் திரும்பி வந்திருப்பார் என்று நம்புகிறேன்.

என்னுடைய பம்பாய் முகவரியை கீழே கொடுத்து இருக்கிறேன். என்னுடைய அன்பு கலந்த நமஸ்காரங்களை ஸ்ரீ வசந்த்ஜி பட், ஸ்ரீ அமல்தா, யாளி தா, கேசவ்ஜி, சுஜித், அஜித், சரத், போலா, விபுல், பூர்ணா மற்றும் பிறருக்குத் தெரிவிக்கவும். மூன்று செயலர்களான ஸ்ரீ காளி தா, சியாமா பிரசாத், சரோஜ் பாபு ஆகியோர் 76-ம் எண் இல்லத்துடன் தொடர்பு வைத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். தங்கள் மனத்தைச் செலுத்தி இவ்விஷயத்திற்காக உழைப்பார்கள் என்றும் நம்புகிறேன். தற்போதைக்கு வேறொன்றும் இல்லை. பம்பாயில் உங்கள் கடிதம் எனக்குக் கிடைத்த பிறகு இன்னும் உங்களுக்கு எழுதுவேன்.

தங்கள்

**ஏக்நாத் ரானடே.**

### கேந்திரச் செய்தி

குமரி மாவட்டம் தெங்கம்புத்தூர் பாலர் பள்ளியில் வவேகானந்த விழா அழகாகக் கொண்டாடப்பட்டது. சமய வகுப்புக் குழந்தைகளும், பாலர் பள்ளி குழந்தைகளும் பல்சுவை விருந்து அளித்தனர். திரு. அருள்குமார் கேந்திரத் தொண்டர்கள் ஆர். சகுந்தலா, ஆர். ரெஜினாள், 400 பெற்றோர்கள் பங்கேற்றனர். பரிசுகள் ரூபாய் நான்காயிரத்திற்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. விழா ஏற்பாடு ஆர். ரெஜினாள், எஸ். பொன்மதி.

# விஞ்ஞானியின் பார்வையில் வேதாந்தம்

எழுதியவர் – பேராசிரிர் ஆர்தர் ஐசன்பர்க்

அப்படியானால் மாயை என்பதுதான் என்ன? அச்சொல்லை கலா பூர்வமான படைப்பாற்றல் என்ற தொடரால் மொழி பெயர்க்கலாம் என்றிருக்கிறேன். காளிதாஸன், பல சொற்களையும் கருத்துக்களையும் – வெறுஞ்சொற்கள்–எடுத்து, மனத்தைச் சொக்க வைக்கும் சாகுந்தலமாக மாற்றுகிறானே, அது மாயையின் சக்தியினால் தான். ஒரு வெறும் முரட்டுச்சாக்கை எடுத்து அதில் நிறச்சாயத்தை அப்பி, இரவுக்காவல் என்ற அற்புதச் சித்திரத்தை ரெம்பிராண்ட் உண்டாக்குகிறானே அது மாயையின் சக்தியால் தான். அழகிய சித்திரத்தை நாம் பார்க்கிறோம். மனத்தைப் பறி கொடுக்கிறோம். அதிர்ஷ்டவசமாக, அந்த அழகிய இயற்கைக் காட்சி, அந்த மனத்தைக் கவரும் பெண், விளையாட்டுக் குழந்தை இவை உண்மைகள் அல்ல, வெறும் சாயத்திட்டுகளின் புத்திசாலித்தனமான வடிவமைப்பே, அந்த கலைப்பொருளின் மூலப் பொருள்களை மறக்க வைக்கும் ஒரு ஏமாற்று வேலையே.



இந்த சித்திரக்கலை உவமையே இன்னும் சற்று நீட்டிக்கலாம்.

நமக்கு முன் வெண்தாடிக் கிழவன் ஒருத்தனின் வண்ணப்படம் ஒன்று இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதைப் பாருங்கள் என்று உங்களிடம் சொன்னால் அதைப் பார்ப்பீர்கள். வண்ணப் படத்தை உற்றுப் பாருங்கள்.

பார்க்கிறேன்.

என்ன பார்க்கிறீர்கள்?

ஒரு கிழவனை.

நிஜமாகவே ஒரு கிழவனின் படம்தானா இது?

நிஜமாகத்தான்.

இப்போது வேறொரு கேள்வி கேட்கலாம்.

–இந்தக் கிழவனின் படத்தைப் பாருங்கள். இந்தப்படம் என்பது உண்மையில், பல நிறங்களை புத்திசாலித்தனமாக வடிவமைத்தது தானே.

ஆமாம்.

இந்த வண்ணங்கள், ரசாயனப் பொருள்களின் சேர்க்கைதானே. அந்த வண்ணங்களைப் பிரித்தெடுக்க முடியுமல்லவா?

ஆமாம்.

அந்த வண்ணங்கள் அணுக்களின் சேர்க்கை தானே.

ஆமாம்.

அந்த அணுக்கள் நேர் மின்னணுக்கள். எதிர் மின்னணுக்கள் இவற்றின் சேர்க்கை தானே!

ஆமாம்.

இந்நிலையில் நான் ஒரு பெயர் விளக்கத்தை வைக்கிறேன். இரண்டு பொருள்கள் இருக்கிறதென வைத்துக் கொள்வோம். அவற்றுள் தனித்து நீடித்து அதிகநேரம் இருக்கக்கூடிய பொருள் அதிக நிஜமானது என்போம்.

ஒரு உதாரணம் இந்தப் பொருளை விளக்கும். ஒரு குயவரை மண்ணிலிருந்து பானை ஒன்று செய்யும்படி கூறுவோம். பானைக்கு முன்பே மண் இருந்தது. பானையை உடைத்து விடலாம், மண்ணை இழக்காமலேயே. இதையே வேறு சொற்களில் கூறினால் பானை செய்வதற்கு மண் ஒரு முன் தேவை. மண் பானையாகாமலேயே தொடர்ந்து மண்ணாக இருந்திருக்க முடியும். பானையின் இருப்புக்கு மண் காரணம். மண்ணின் இருப்புக்குப் பானை காரணமல்ல. மேற்கூறிய பெயர் விளக்கத்தின்படி ஒப்புமையால், பானையைவிட மண் அதிக நிஜமானது.



இப்பெயர் விளக்கத்தை கிழவனின் வண்ணச் சித்திரத்தின் மீது ஏற்றிச் சொன்னால், நிஜங்களின் ஏறுவரிசை ஒன்று தெரியவருகிறது. ஒப்புமையால் குறைந்த நிஜம், வண்ணச் சித்திரம்–ஏறு வரிசையில், சாயங்கள் அதிக நிஜம். கலவைகள் இன்னும் அதிக நிஜம். அணுக்கள் கலவைகளைவிட அதிக நிஜம். எதிர், நேர் மின்னணுக்கள் அணுக்களை விட நிஜம்.

இந்த விவாதத்தில் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். இந்த ஒப்புமை நிஜங்கள் என்ற கருத்தின், பெயர் விளக்கத்தில் புரியாததோ ரகசியமோ ஏதும் இல்லை என்பது ஒன்று. ஒப்புமையால் அதிக நிஜமான ஒன்று, போகப்போக அதிக தத்துவ ரீதியானது ஆகவும், மனதுக்கடங்காததாகவும், மாறிவிடுகிறது என்ற பிரமிக்க வைக்கிற முடிவு மற்றொன்று. கிழவனின் சித்திரத்தை நாம் கையாளலாம். சாயங்களை நாம் காணவும் கையாளவும் முடியும். மின்னணு உருப்பெருக்கி ஒன்று அணுக்குழுக்களைக் காண உதவி விடும்.

எதிர், நேர் மின்னணுக்களையும், அவற்றின் விளைவுகளின் மூலம் நாம் காணலாம். இந்த இடத்தில் நாம் ஒரு உருவகத்தைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பௌதிக சாத்திரத்திலும்கூட எதிர் மின்னுக்களும், நேர் மின்னணுக்களும், இறுதி உண்மைகள் அல்ல. உறைய வைக்கப்பட்ட சக்தியாகவே அவை எண்ணப்படுகின்றன. இது என்னை என்ன எண்ணத் தூண்டுகிறது தெரியுமா? பொருள் என்பது சக்தியின் வேறொரு வடிவமாகவே எண்ணப்படுவதுபோல, சக்தியும் வேறெதோ ஒன்றின் வேறொரு படிவமாகவே இருக்குமோ என்று எண்ண வைக்கிறது. சக்தி என்பது உறைய வைக்கப்பட்ட மனப்பொருளாக இருக்குமோ?

கிழவனின் வண்ணச் சித்திர விஷயத்தை இன்னும் நாம் முடிக்கவில்லை. இந்த வண்ணச்சித்திரத்தை ஒரு உருப்பெருக்கியின் மூலம் பார்த்தால் வண்ணச் சித்திரமே காணாமல் போய்விடும். உண்மையில், நம் கருத்தை யாரும் எதிர்க்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் கூறுவோம். மின்னணுக்களின் அளவில் நின்று பார்க்கும்போது, வண்ணச் சித்திரம் என்ற ஒன்று இல்லவே இல்லை. அதேசமயம், நாம் இதையும் சொல்லலாம். வண்ணச் சித்திரத்தில் மனத்தைப் பறிகொடுத்த ஒருத்தனுக்கு மின்னணுக்கள் என்பன இல்லவே இல்லை. ஏனெனில் அந்த மனநிலையில் அவை அவனுக்குப் பொருளற்றவை, கருதத்தகாதவை.

நாம் வாழ்க்கைப் பிரச்சனைகளில் கிடந்துழல்கிறோம். நம்மில் சிலரே மாயையைப் பற்றி நினைக்கிறோம். இவ்வெளி உலகம், வெறும் வலிந்து மேற்கொண்ட சத்தியமென ஒரு இரண்டாந்தர நிஜமென நாம் நினைக்க வேண்டும். நமக்குத் திருப்தி தருகிற, நம்மைக் கவருகிற ஒன்றிலிருந்து மனத்தைப் பிரித்திழுப்பது கஷ்டம்தான். இவ்வுலகைத் தகர்த்து, அதனினும் அதிக ஆழமான இறுதியான நிஜத்தைக் காண்பது கடினம்தான். சங்கரரின் அழியாத புகழ் அவர் அந்த இறுதி நிஜத்தைக் கண்டார் என்பதே. இந்த வண்ணப்பட உருவகத்திலிருந்து இன்னும் ஒரு பாடம் கற்றுக் கொண்டு இந்த உருவகத்தை மறந்து விடலாம். சாயநிறம் என்ற நிலையில் நின்று பார்த்தால் வண்ணச்சித்திரம் குறைந்த அளவில் நிஜமானது. அதற்கென, வண்ணச்சித்திரம் நிஜமல்லாதது என்று கூறிவிடுவது அபத்தம். வண்ணச் சித்திரம் உண்மையில் நிஜமானதுதான். அதைவிட மேலும் மேலும் அதிக நிஜமான தரங்களை நோக்கி நாம் செல்லும் போதுதான் அது நிஜமல்லாததாகி விடுகிறது.

# நோயில்லா வாழ்வில் உடலில் இயற்கை வேகங்களின் பங்கு

டாக்டர் வே. கணபதி எம்.டி – சித்தா

உயிர்கள் எல்லாம் பிராணவாயுவால் வயப்பட்டது போல உயிர்களின் உடல்கள் யாவும் அக்கினியால் ஆள்கொள்ளப்பட்டதாகும். உயிர்களின் இரத்தத்தை மையமாகக் கொண்டு தற்காலத்தில் பிரித்தறியும் உயிர்வகைகளான வெப்ப இரத்த பிராணிகள், குளிர் இரத்த பிராணிகள் யாவும் அதனதன் உயிர் வாழ்வு அந்தந்த உடலின் வெப்பத்தைச் சார்ந்துள்ளது. உயிருக்கு ஆதாரமான அக்கினியின் தரத்தைக் கொண்டே உயிரின் வலிமை, திடம் நிர்ணயிக்கப்படுகிறது என்பது உண்மை. உயிர் வாயுவும், இதர வாயுக்களும் குளிர்மையால் பாதிப்படையாமல் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவும், அதனதன் செயல்பாடுகளை சரிவரச் செய்யவும் அக்னியின் துணை அவசியமாகும். ‘‘உடல் ரொம்ப சூடாக இருக்கு, கண் எரிச்சலா இருக்கு, சிறுநீர் கடுப்பாய் இருக்கு’’ இது எல்லாமே உடல் அக்கினியின் துணை அவசியமாகும். உடல் குளிர்ந்து போய்விட்டது என்றால் உயிர் இல்லை என்ற அர்த்தத்தில் நினைக்கும் இன்றைய காலத்தில் அக்கினியின் பாங்கே தனி மகத்துவமானது. பிராண வாயுவையும் சுற்றுச் சூழலிலிருந்து பெற்றுக் கொள்வதைப் போல அக்கினியையும் சுற்றுப்புறத்திலிருந்து பெற்றாலும் உடலுக்குள்ளே உற்பத்தியாகும் அக்கினி மண்டலங்கள் உண்டு. ஆக உடல் அக்கினியின் தோற்றம், ஒடுக்கம் பற்றி அறிவது மிக முக்கியமானதொன்று. உண்ட உணவு சீரணம் முதல் மன பேதம் வரைக்கும் காரணமா இருந்து வழிநடத்தும் உடல் அக்கினியின் நிலைகளை நாம் ஓரளவுக்கு முழுமையாக அறிந்து ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகாணவேண்டும். உடலிலுள்ள ஒவ்வொரு விலங்கு(செல்)களிலும் பிராணவாயு நீர்மப் பெருள்கள் இருப்பதுபோல அக்னியும் இருக்கும் என்பது உண்மை. உடலுக்குத் தக்கவாறு, உண்ணும் உணவுக்குத் தக்கவாறு, சுற்றுச்சூழலுக்குத் தக்கவாறு, நோய்நிலைகளுக்குத் தக்கவாறு, மனநிலைகளுக்குத் தக்கவாறு, செயல்பாடுகளுககுத் தக்கவாறு பேதப்படும் உடல் அக்னியின் இயல்பான நிலை, உடலில் உருவாகும் இடம், அதன் பயன்கள் உள்ளிட்ட இவைகளை நாம் அறிந்து கொள்வோமாக!

**உடல் அக்னி என்றால் என்ன?** உடலின் வாத, பித்த, கப எனும் முக்குற்ற நிலைகளில் பித்தக் குற்றத்திற்கு மையமானதும், பஞ்சபூதங்களில் ‘தீ’ பூதத்தில் இருப்பதும் உடல் அக்னியாகும்.

**இயல்பு நிலையில் உடல் அக்னியின் பயன்கள்:** 1) பிராணவாயு, நீர் இவற்றின் சலனங்களுக்குக் காரணமாக இருப்பது. 2) உண்ட உணவுகளை செரிக்கப் பண்ணுவது. 3) வீரம், உற்சாகம், மன எழுச்சி. இவைகளுக்குக் காரணமாக அமைவது. 4) சுற்றுப்புறத்திலிருந்து உடலைப் பாதுகாத்து

நோய்க்கிருமிகளை அகற்றுவது, 5) கண் பார்வை, புத்தி, தூக்கம், இவைகளுக்குக் காரணமாக இருப்பது.

## உடல் அக்னியின் வகைகள் யாவை?

**1) மூலாதாரக்னி:** இவ்அக்னியானது, ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்திலிருந்து தொப்பூழ் பகுதிவரை இருக்கும்.

**2) சமானா அக்னி:** இது வயிற்றின் இரைப்பை அடிப்பகுதியில் இருக்கும்.

**3) கபால அக்னி:** மூளைக் கபாலத்தில் முழுவதும் செயல்படும் அக்னி.

மேற்கண்ட மூன்று அக்னிகளும், உடலின் இயல்பாக அமையப் பெற்றனவாகும். உடல் அக்னியின் செயல்பாட்டை வைத்து மேலும் பலப் பிரிவுகளாகப் பிரித்து கூறலாம்.

**1) விஷமக்னி:** சீரான நிலையின் போது சரிவரச் சீரணமாகாமல் விஷம நிலைக்குச் செல்ல நேரிட்ட அக்னிக்கு விஷமக்னி என்று பெயர்.

**2) தீச்சாக்னி**யானது உண்ட உணவுகளைச் செரிக்கும் பொழுது மேலும் உஷ்ணம் பெறும் வகையில் அமைய பெற்ற அக்கினி தீச்சாக்னி என்று பெயர்.

**3) மந்தாக்னி:** உடலிலுள்ள அக்னியானது செரிக்கும் போது மாவு உள்ளிட்ட தாமசக் குணம் கொண்ட பொருள்களுடன் சேரும் பொழுது அஜீரணம் உள்ளிட்ட நோய்நிலை உண்டுபண்ணும் மந்தாரக்னியாக உள்ளது.

**1) ஓமாக்கினி (அ) ஓமத்தீ:** குறிப்பிட்டக் கால நிலையில் செயல்பாட்டில் உடலில் உண்டாகும் அக்னி.

**2) கோபாக்னி:** இது மனநிலை கோபத்தின்போது உண்டாக்கப்படுவது.

இதைத்தவிர ஜாடராக்னி உதாராக்னி, காமாக்னி, சடாக்னி போன்ற அக்னி நிலைகளும் உடலில் உள்ளன.

உணவு செரித்தலை மையமாகக் கொண்டு நமது உடலில் உள்ள அக்னியானது கமலக்னியாக, தீபாக்னியாக, காடாக்னியாக அக்னியின் தன்மைகளைக் கொண்டு பாரம்பரிய மருத்துவத்தில் உடல் அக்னி நிலைகளை தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

சாத்வீக உணவுகளைச் (மிகு உணவு வகைகளை) செரிக்கும்போது உடலிலிருந்து செயல்படும் அக்னி கமலாக்னியாக அதாவது தாமரை இதழ் போல் மிக அமைதியாக நிதானமாக, மெல்லிய குவிந்த தீபநிலையில் இருப்பதாகும்.

இரசோ குண (இலகும் சற்று கடினமான) உணவுகளைச் செரிக்கும்போது உடல் அக்னியானது தீபாக்னி நிலையில் இருந்து செரித்தல் நிலை புரியும். தாமச குண (அசைவம் மற்றும் கடின) உணவுகளைச் செரிக்கும் போது காடாக்னியாக இருந்து செரித்தல் நிலை புரியும். ஆக இயல்பு நிலையில் அக்னியானது பல்வேறு நிலையில் உண்ண உணவு செரித்தலுக்குத் தக்கவாறு வீறுற்றுக் காணும். எங்ஙனம் தேவைப்படும்போது நீர், வாயு அதிகம். உடலுக்குள் உட்கொள்ளப் படுகிறதோ, அதேபோல உணவுக்குத் தக்கவாறும், உடல் அக்னி அதிகப்பட்டும், குறைந்தும் தத்தம் தொழிலைச் செய்யும் வகையில் அக்னியை உற்பத்தி செய்யும் அக்னி மண்டலங்கள் உடலில் உள்ளன.

# சகோதரி நிவேதிதை

பேராசிரியை திருமதி. ஆர். நாகம் சுப்பிரமணியம்

## *பண்பாடும், தேசீய உணர்வும் வளர்க்கும் கல்வி*

### கட்டுரை – 6

தாய்நாடு ஒரு பெரிய விரிந்த பல்கலைக்கழகம். தாய்நாடாகிய பல்கலைக்கழகத்தில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் அப்பல்கலைக்கழகத்தின் மாணவச் செல்வமே. ஆகவே கல்வி பெறும் வாய்ப்புக்களை முழுமையாகப் பயன்படுத்துவது தேசத்திற்குச் செய்யும் தொண்டு ஆகும். கல்வி வாய்ப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் எல்லா வகையான முயற்சிகளுக்கும் பின்னே அம்முயற்சிகளின் செலுத்து சக்தியாக இயங்குவது பண்பாட்டு மேம்பாட்டு இலட்சியமே.

கல்வியினால் பண்பட்ட ஒருவர் தன்னை மதிக்கிறார். தான் தன்னை மதிப்பது போலவே, பிறர் தத்தம்மிடம் கொண்டுள்ள மதிப்பை ஏற்றுப் பிறரையும் மதிக்கிறார். விழுமிய மனிதர்களின் உறவை வளர்த்துக் கொள்கிறார். விழுமியோர் உறவின்றி இணைந்து செயற்படத்தேவையான சிறந்த அமைப்புக்களை உருவாக்க இயலாது. தான் ஏற்றுக் கொண்ட இலட்சியத்திற்கு மதிப்பும், மரியாதையும் அளிப்பதுதான், அந்த இலட்சியத்திற்கு நம்மை ஈர்த்த இலட்சியவாதிக்கு அளிக்கும் மதிப்பையும், மரியாதையையும் விட மிக முக்கியம். சோம்பலை அறவே தவிர்த்துத் தொழில்புரிதல், செயலாற்றுவதில் தளராது ஈடுபட்டிருத்தல் ஒரு இலட்சியப் பண்பு. ஆனால் செய், இதயத்தின் தீவிரச் செயற்பாட்டின் விளைவாய் இருத்தல் வேண்டும். நமது முன்னோர்கள் கணிதவியலுக்கும், தத்துவ இயலுக்கும், தர்க்கவியலுக்கும் மதிப்பும் முக்கியத்துவமும் அளித்து அவற்றைக் கற்று ஆராய்ந்து தேர்ச்சி பெற்ற தீவிரத்தைப் போற்றுவதோடு கூடவே வரலாறு, அறிவியல் போன்ற இன்றைய சூழலில் மிகத்தேவைப்படும் அறிவுத் துறைகளில் தேர்ச்சி பெற அதே அளவு தீவிரத்தைக் காட்டுதல் தேவை. நமது முன்னோர்களிடம் இருந்து சத்திய வேட்கை கொள்ளும் பண்பையும், அறிவு நாட்டம் கொள்ளும் பண்பையும் பாரம்பரியச் செல்வங்களாகப் பெற்றோம். இன்றைக்குத் தேவைப்படும் புதிய துறை அறிவுகளையும், பயபக்தியோடு தேடிக் கற்றுத் தேர்ச்சி பெறவே சிறந்த கல்வியாகும். கல்வியின் இறுதி இலட்சியமே மெருகேறிய பண்பட்ட நன்னடத்தையைப் பேணுவதே.

இந்தியாவின் எதிர்காலம் கல்வியைச் சார்ந்தே உள்ளது. கல்வி வாய்ப்புக்கள் நாட்டின் அத்தனை தர மக்களுக்கும் கிட்டவேண்டும் என மிக மன எழுச்சியுடன், உறுதிபட இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே குரல் எழுப்பினார். நிவேதிதையின் இக்குரலில் இரண்டு முக்கிய கருத்துக்கள் ஒலித்தன. ஒன்று நாட்டின் மக்கள் அனைவருக்கும் கல்வி கிட்டவேண்டும் என்னும் நாடு தழுவிய கல்விக்கான இன்றியமையாத் தேவையையும், வழிமுறையையும் பற்றிய கருத்துக்களின் ஒலி யாருக்கு அளிக்கப்பட்டாலும், சிறுவர், மழலையர் சிறுமிகள், ஆண்கள், பெண்கள் என யாருக்கு அளிக்கப்பட்டாலும் அது தேசீயக் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதாய், தேசீயக் கலாச்சார வேர்களை அடிப்படையாய்க் கொண்டதாய், இருத்தல் வேண்டும். அதுபோலவே கல்வியின் தன்மையும் அறிவுக்கிளை எதுவாயினும் – மழலையர் தோட்டக்கல்வி, ஆரம்பக்கல்வி, உயர்கல்வி, கல்லூரி, பல்கலைக்கழகக்கல்வி, தொழிற்கல்வி, சமயக்கல்வி, சமயம் சாராக்கல்வி, உயர்நிலை ஆராய்ச்சி என எந்த நிலைக் கல்வியானாலும் அது தேச பக்தியை, தேசத்தின் சூழல் பற்றிய அறிவை, தேச நலன் கருதிய உணர்வு பூர்வ சிந்தனையை, தேச நலனுக்காகத் தொண்டாற்றவும், தேச நலனுக்குகந்த தொழில்களையும். கலைகளையும் வளர்க்கவும் உதவும் கல்வியாய் அமைதல் வேண்டும் என்பது நிவேதிதை வலியுறுத்திய கருத்து.



இந்தியப் பாரம்பரிய நாகரிகத்திலும், கலாச்சாரத்திலும் தனிமனிதனின் சமூகப் பொறுப்புணர்ச்சியும், கடமையும் நிறையவே வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன் விளைவாகவே அன்னதானமும், பிறவகை தான தர்மங்களும் புனித இடம் பெற்றுள்ளன என்பதை உணர்த்தும் நிவேதிதை, அனைவருக்கும் அறிவாற்றல் அளிக்கும் நாடு தழுவிய கல்வி வழங்குவது இன்றைய நிலையில் பிறவகை தான தர்மங்களைப்போல, அவற்றிலும் மேலாகவே புனிதம் உடையது கல்வி அளிக்கும் பணி.

நாடு முழுவதும் கல்வியறிவு பரவினால் இந்தியாவின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும் உறுதிப்படும். பல்வேறு மொழிகள் பேசப்படும் நாட்டில் பிறர் தலையீடின்றி இயந்திரத்தனமான மேல்மட்ட மைய நிறுவனங்களிடம் பொறுப்பையும், அதிகாரத்தையும் ஒப்படைக்காமல் எளிய முறைகளில் பரவலாக கல்வி அறிவு பரப்பப்படுமானால் மொழிப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படும் என அறிவுறுத்தியுள்ளார் நிவேதிதை.

*அமரர் சரஸ்வதி கிருஷ்ணன் அவர்கள் நினைவாக*

# அலையும் துறவி

ஆர்.சி. தாணு

பகல்காம் சென்றவர்
பட்டத்து ராஜா கேத்ரியின்
க்ஷேத்திரத்தில் விருந்தினராய்
வீற்றிருந்தார். அங்கிருந்த
அம்பிகை கோயிலுக்குள்
அன்புருக அவதானித்தார்.
பிரகாரத்தினுள் பிரவேசித்தவரை
பிரகாசம் குறைந்து பிசகிப் போன
விலைமாதர்கள் விரைந்து வந்து
பாதம் பணிந்தனர்.
கேத்ரியின் சேவகர்கள்
கேவலம் என விரட்டினர்.
மிரட்டி விரட்டியவர்களை
விடுவிக்கச் சொன்னவர் பெண்தனை
பாதம் பணிய பச்சைக் கொடி
காட்டினார். பாதம் பணிந்தவர்
பன் மடங்கு புண்ணியம்
பெற்றதால் பேசிக் கொண்டனர்.
கருணையை கண்ணுற்ற
சகோதரி நிவேதிதை கண் கலங்கி
கை எடுத்து வணங்கினார்.
செவி சாய்த்து சேவித்த
சேவியர் தம்பதியர் சேம
நலனுக்காய் மாயாவதியில்
ஆசிரமம் அமைக்கப்பட்டது.
பின்னாளில் பிரபலமடைந்த
''பிரபுத்த பாரதம்'' ஆங்கில
மாத இதழ் இங்கிருந்துதான்
இசை எழுப்ப துவங்கியது.

கல்கத்தாவின் கவித்துவ
கைகளிலிருந்து ''உத்போதன்''
வங்க இதழ் உத்வேகத்துடன்
உருவானது. கயிலையான்
கடைக்கண் காட்டிய காசியில்
வேதியர் வேதம் பயில,
மடமும் வயோதிகர் மனம்
மகிழ, மருத்துவமனையும்
மலர்ந்தன. 1899-ஜுன்-20
ஆன்றோர்களின் அழைப்பால்
அமெரிக்கப் பயணம் மறுபடியும்.
1900 பாரீஸ் பேரவையில்
பக்தர்கட்குப் பேருரை.
பயணம் முடித்தவர் பேலூர்
வந்தார். மடத்து செயல்களின்
மகிமை குறித்து மனம்
குளிர்ந்தார். பொறுப்புக்களை
துறவிகளிடம் ஒப்படைத்தார்.
1902 ஜீலை - 4 ஆன்மகுரு
அன்று அதிமகிழ்ச்சியுடன்.
நீண்ட நேரம் தன்னை மறந்து
தியானத்தில் சீடர்களின்
சிந்தை செதுக்கும் சீரிய
போதனை . . . . . . . .
சிறகில்லா பறவைகளிடம்
சிட்டென பறக்க சிந்தனை
பிரவாகம் . . . . . . . . .
கவலையின் கடும் பிடியில்
சிக்கியவர்கள் முகம் மலர்ந்து
முன்னேறும் வகையில்
பிரார்த்தனை.

# திருமாளிகைத்தேவர்

## என்.எஸ்.பி

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா அருளிய ஒன்பதின்மரில் முதல்வர். பாடியவை நான்கு பதிகங்கள். பாடல் தொகை 45. முதல் மூன்று பதிகங்கள் பஞ்சமப் பண்; நான்காம் பதிகம் காந்தாரம்.

திருமாளிகைத்தேவர் பற்றிய ஆய்வு தரும் உண்மை சிந்திக்கத்தக்கது. இவர் தில்லையில் திருமடம் அமைத்து வாழ்ந்தார் எனலாம். இவர்மீது வழங்கும் கதைகளால் இவர் சித்தர் என்னும் கருத்து வளர்ந்துள்ளது. சில அற்புத நிகழ்ச்சிகள் இவர் வாழ்க்கையில் செய்திகளாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஆனால் இப்பாடல்களில் **சித்தர்–அனல்** இல்லை; **பக்திப்புனலே** காணக் கிடைக்கிறது. இவர் பெயரில் மற்றொருவர் சித்தராக வாழ்ந்திருக்கலாம் என்பர் அறிஞர்.

திருமாளிகைத்தேவர் அருளிய நான்கு பதிகங்களும் முதற்பாடலின் தொடக்கத் தொடரால் சுட்டப்படும். ஒளிவளர்விளக்கு, உயர்கொடி ஆடை, உறவாகிய யோகம், இணங்கிலா ஈசன், என்னும் இனிய தொடர்கள் பதிகங்களைச் சுட்டும். முதல் பதிகம் ஒளிவளர் விளக்கு. இது மங்கலத் தொடர்களால் சிவனை ஆராதிக்கின்றது. சிவமணம் கமழும் இனிய தொடர்கள் தங்கு தடையற்றுப் பொங்குகின்றன. மங்கலம் நிரம்பிய சொல்லாட்சியால் பேரானந்தம் மனம் நிரம்புகின்றது.

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங்காக!
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

என முதற் பாடலிலேயே **மங்கலச் சொற்கள்** சிறகடித்துப் பறக்கும் பேரழகைக் காண்கின்றோம்.

சசி கண்ட சிகண்டா, சாமகண்டா, காலகாலா, காமநாசா – என சிவநாமத்தை வடமொழியில் குழைத்தும் இனிமை செய்வார். நீறணி பவளக் குன்றே, பிறப்பிறப்பறுத்த பேரொளியே, கண்கள் மூன்றுடையதோர் கரும்பே – எனத் தமிழினிமை சொட்டவும் இறைப்புகழ் தருவார்.

**தம் பக்தியைச் செழுமைப்படுத்த வேண்டி நிற்கும்** முடிப்புச் சொற்களால் சிறக்கின்றது இப்பதிகம். தொண்டனேன் விளம்புமா விளம்பே, உரைக்குமா உரையே, பணியுமா பணியே, கருதுமா கருதே, இசையுமா இசையே . . . என்றெல்லாம் பாடி நெகிழ்கின்றார்.

இரண்டாம் பதிகம் **உயர்கொடி ஆடை**. திருவிசைப்பாவில் அமைந்த **பாதாதிகேசப் பதிகங்கள்** இரண்டு. அவற்றில் ஒன்று இது. திருஉருவத்தை அங்கம் அங்கமாய்ச் சுவைத்துப் பரவசம் அடைகின்து இப்பதிகம்.

''உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும் உன்னடிக் கீழது என்னுயிரே'' என்பது திருவடி – நெகிழ்வு. ''அணிமணி முறுவல் பவள வாய்ச் செய்ய சோதியுள் அடங்கிற்றென் அறிவே'' என்பது செவ்விதழ் – நெகிழ்வு.

மூன்றாம் பதிகம் **உறவாகிய யோகம். அகத்துறை** அமைப்பில் பக்தி சுரப்பது. மகேந்திரமலைச் சூழல், எனவே குறவா, வேடா, மருந்தே, தேனே – எனப் பாடும் நயம், சிவபிரான் வேடுவனாகி அருச்சுனனுக்கு அருளிய பொருத்தம் – என்பவை பதிகத்துக்குச் சுவை சேர்க்கின்றன. ''குலாத்தில்லையம்பலக் கூத்தனையே'' என்னும் முடிப்புரையுடன் அமைகின்றன பாடல்கள். குலா என்பது குலாவுதல், மகிழ்தல் என்னும் பொருள் தருவது. திருவாசகத்தின் குலாப்பத்தும், திருவார்த்தையும் இப்பதிகத்துடன் இணைத்துக் காணலாம் என்பர்.

நான்காம் பதிகம் **இணங்கிலா ஈசன்.** இது அறுசீர்விருத்தம். முந்தைய மூன்றும் எழுசீர் விருத்தங்கள். முதல் மூன்று பதிகங்களின் மங்கலக் குளிர்ச்சி இதில் இல்லை. இப்பதிகப் பாடல்களின் முற்பகுதி தில்லைவாணனின் பெருமை பேசும். பிற்பகுதி இணங்காதாரை இழித்தும், பழித்தும் பேசும். ''காணா கண்; வாய் பேசாது அப்பேய்களோடே'' – என்பது முடிப்புரைத் தொடர். ''இறப்பொடு பிறப்பினுக்கே இனியராய் மீண்டும் மீண்டும் பிறப்பர்'' என்பது மென்மையான வசவு. 'கோறை வாய்ப் பீறப் பிண்டப் பிணங்கள்', 'கல்லாப் பொல்லாக் கயவர்' போல்வன வன்மையான வசவுகள். ஏனைய முப்பதிகங்கள் பாடியவர் தானா இவர் என்னும் ஐயம் தோன்றுமளவு **கடுஞ்சொல்**லுடையது இப்பதிகம்.

Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.